# காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

## ஆண்டு அறிக்கை

## 2022

*இல. 40, 03ம் மாடி, புத்கமுவ வீதி, ராஜகிரிய*

சொற்சுருக்கங்கள்

CoA காணப்படாமைக்கான சான்றிதழ்

CoD மரணச் சான்றிதழ்

CoI விசாரணை ஆணைக்குழு

CTF ஆலோசனைச் செயலணி

DNA தேசிய சுவடிக்காப்புத் திணைக்களம்

EU ஐரோப்பிய ஒன்றியம்

GSP முன்னுரிமை தொடர்பிலான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம்

ICRC சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

INGOs சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்

MIA இராணுவ நடவடிக்கையின் போது காணமல் போதல் மற்றும் வலிந்து காணமலாக்கப்படுதல்

MoFA வெளிவிவகார அமைச்சு

MoJ நீதி அமைச்சு

MoU புரிந்துணர்வு ஒப்பந்தம்

MSD முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

NGOs அரச சார்பற்ற நிறுவனங்கள்

OMP காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

PC சனாதிபதி சட்டத்தரணி

RTI தகவலுக்கான உரிமை

SLIDA இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

UN ஐக்கிய நாடுகள் சபை

UNWG ஐக்கிய நாடுகள் செயற்குழு

UNWGIED தன்னிச்சையின்றிக் காணமலாக்கப்பட்டவர்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் செயற்குழு

WGIED தன்னிச்சையின்றிக் காணமலாக்கப்பட்டவர்கள் பற்றிய செயற்குழு

உள்ளடக்கம்

தவிசாசளரின் வாழ்த்துச் செய்தி ........ 40

1. முன்னுரை ........ 43

2. அறிமுகம் ........ 44

3. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் நோக்கங்கள் ........ 46

4. கடப்பாடுகள் ........ 46

5. தூர நோக்குகளும் நிறுவனஞ்சார் முன்னுரிமைகளும் (செயலாற்றற் கொள்கைகள்) .... 47

6. பிராந்திய நிருவாகம் ........ 48

7. நிகழ்வுகள் சார்ந்த இற்றைப்படுத்தல் ........ 49

8. சட்டம், கொள்கை, ஆய்வுப் பிரிவு ........ 50

8.1 விசாரணைச் செயன்முறை ........ 51

8.2 சவால்கள் ........ 54

8.3 இதுவரையிலான முன்னேற்றம் ........ 54

9. தரவுகளைப் பதிவுசெய்யும் பிரிவு ........ 54

10. பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு ........ 55

10.1 காணாமல் போனவர்களின் தரவுகளை உள்ளடக்கும் படிவம் ........ 58

10.2 பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்குகின்ற வெளிக்கள அனுசரணைகள் ........ 58

11. நிதி மற்றும் பெறுகைப் பிரிவு ........ 59

12. மனிவள மற்றும் நிருவாகப் பிரிவு ........ 59

12.1 பணியாளர் ஆட்சேர்ப்பு ........ 60

13. தொடர்பாடல் மற்றும் தொடர்புகொள்ளல் பிரிவு ........ 61

13.1 ஊடகங்களுடனான தொடர்பு ........ 61

13.2 எண்ணிம நடைமுறை ........ 62

14. தகவலுக்கான உரிமை ........ 62

15. 2022 இல் எதிர்கொண்ட சவால்கள் ........ 63

16. நன்றி நவிலல் ........ 63

17. கணக்காய்வு அறிக்கை ........ 64

## தவிசாளரின் வாழ்த்துச் செய்தி

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் 2018 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களது விதி பற்றிய உண்மையை நிறுவுவதற்கான முக்கியமானதொரு படிமுறையாகக் கொள்ளப்படுகின்றது. சட்டவாக்க நடைமுறை ஊடாக காணாமல் போன ஆட்களது விதிகளை நிறுவுதற்கான வெளிப்படையான கடப்பாட்டினை OMP பெற்றுக்கொண்டுள்ளது. பாராளுமன்றப் பேரவையின் மூலம் நியமிக்கப்பட்ட 07 உறுப்பினர்களை OMP கொண்டுள்ளதுடன் தற்போதுள்ள உறுப்பினர்கள் நிலைமாறுகால நீதி, மருவு நீதி நடைமுறை சார்ந்த தத்தமது நிபுணத்துவத்தின் அடிப்படையிலும் அனுபவத்தின் அடிப்படையிலும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். OMP இன் கடின உழைப்பின் காரணமாக விளைவாக காணாமல் போன ஆட்களது பட்டியலை வெளியிட்டு விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளது.

இவ்வருடத்தில், பலதரப்பட்ட பிரதேசங்களில் OMP முன்னேறத்தினை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அலுவலகத்தின் நடவடிக்கைகளிலும் காணாமல் பொன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களது குடும்பங்களைத் தொடர்புகொள்வதிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. மேலும், அடிப்படையான சட்டரீதியான மற்றும் கொள்கைரீதியான தலையீடுகளையும், மேம்பட்ட வகையிலான தனியாள் புலனாய்வுகளிலும் விசாரணைகளையும் OMP மேற்கொண்டுள்ளது. குறியீட்டு ரீதியான வழக்குகள் பலவற்றுடன் தொடர்புடைய தகவல்களை OMP பெற்றுக்கொண்டதோடு அவை குறித்த பகுப்பாய்வுகளையும் OMP மேற்கொண்டுள்ளது. 2018 ஜூன் மாதம் தொடக்கம் 11 மனிதப் புதைகுழிகளை அகழ்வதற்கான கண்காணிப்பாளராக OMP செயற்பட்டதோடு பொது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் கட்டிக்காப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்மொழிந்து நிதி உதவிகளை வழங்கி விசாரணைகளுக்கும் துணைபுரிந்துள்ளது. முறைப்பாடுகளை நடத்திச் செல்வதற்கு வசதியாக இச்செயன்முறைக் காலப்பகுதியில் கிளிநொச்சியில் பிராந்திய அலுவலகம் ஒன்றை OMP திறந்துள்ளது. இது மேலதிக சேவைகளை வழற்குவதற்கு வசதியாகவும் வருங்காலத்தில் விசாரணைகளை நடத்திச் செல்வதற்கு ஏதுவாகவும் அமையும். இப்புதிய அலுவலகத்துடன் சேர்த்து இதுவரையில் மொத்தமாக 5 பிராந்திய அலுவலகங்களை OMP கொண்டுள்ளது. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களை நினைவுகூர்வதற்கான ஓர் அங்கமாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தினை இலங்கையிலும் அமைச்சர்கள், சிவில் சமூக நிறுவனங்களது பிரதிநிதிகள், காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களது குடும்ப அங்கத்தவர்கள் போன்றவர்களது பங்குபற்றுதலுடன் OMP நிகழ்நிலையில் நடத்தியது.

மேலும், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாளர் நாயகம் அவர்களுடனும், (பிறப்பு மற்றும் இறப்பு) பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்துடனும், இழப்பீடுகளுக்கான அலுவலகத்துடனும், அமைச்சுகளுடனும் செயற்பாட்டு ரீதியான உறவினை OMP நிறுவியுள்ளதுடன் இரு தடவைகள் பதிவுகள் மேற்கொள்ளப்படுவதனையும் பல தடவைகள் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படுவதனையும் தவிர்ப்பதற்கு அவர்களுடன் இணைந்தும் செயற்படுகின்றது. ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) தூதுக்குழு OMP உடன் கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளது. முன்னுரிமை தொடர்பிலான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் கூட்டல் (GSP+) வணிகச் சலுகைக்கான கைம்மாறாக 27 சர்வதேச சமவாயங்களுக்கு அமைந்தொழுகுமாறு இலங்கையின் முன்னேற்றத்தினை மதிப்பாய்வு செய்வதற்கான அதிகாரிகள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். அச்செயன்முறை வெற்றிகரமாகவும் முன்னேற்றகரமாகவும் அமைவதற்கு ஆற்றிய மகத்தான பங்களிப்புகளுக்கு அத்தூதுக்குழு நன்றிகளைத் தெரிவித்துள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்

குழுவுடனான சந்திப்பு, இராஜதந்திரிகளுடனான சந்திப்பு, நன்கொடை வழங்கல் நிறுவனங்களுடனான சந்திப்பு, தூதுவராலயங்களுடனான சந்திப்பு ஆகியன கடந்த ஆண்டு காலப்பகுதியில் OMP மேற்கொண்ட மகத்தான முன்னேற்ற நடவடிக்கைகளாகும்.

ஓர் ஆணைக்குழு அதற்கு முந்தைய ஆணைக்குழுக்கள் தீர்வு கண்டதன்படி சர்வதேச மனித உரிமைகள் சட்ட மீறல் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல் ஆகியன இடம்பெற்று வருகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக முந்தைய ஆணைக்குழுக்கள் அவ்வாறு கண்டறிந்த தீர்வுகளைப் பரிசீலனை செய்வதற்கான அதிகாரம் ஓர் ஆணைக்குழுக்கு வழங்கப்படுகின்றது. அத்தகைய முடிபுகள் காணப்படின், முன்னைய ஆணைக்குழுக்கள் அப்பொறுப்பு சார்ந்து மேற்கொண்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா? மற்றும் அப்பொறுப்பு சார்ந்த நோக்கங்களை மேலும் வளப்படுத்துவதற்கு வருங்காலத்தில் உள்வாங்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை? போன்றவற்றைக் கண்டறிவது அவ்வாணைக்குழுக்கான மேலதிக கடப்பாடாகும்.

மேலும், OMP இன் செயற்பாட்டுக்கு உகந்த வகையிலான சூழலை ஏற்படுத்துவதற்கும் OMP இல் மேற்கொள்ளப்படுகின்ற அல்லது புதிதாக வருகின்ற முறைப்பாடுகள் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படாதிருத்தலை அவற்றை முறையாகப் பேணுவதன் மூலமாக உறுதிப்படுத்துவதற்குமான முயற்சிகளையும் OMP மேற்கொண்டுள்ளது. அதற்கேற்ப, வலிந்து காணாமலாக்கப்பட்ட ஆட்கள் தொடர்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முறைப்பாடும் மீண்டும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனைக் கடந்த 12 மாதகாலப் பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட இடர்பாடுகளையும் மீறி இலங்கையில் நல்லிணக்கத்தை ஈட்டிக்கொள்வதற்கு காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களின் குடும்பங்கள் தேடுகின்ற உண்மைக்கும் நீதிக்குமான அவர்களது உரிமைகள் உணரப்பட வேண்டும் என்பதில் OMP நம்பிக்கை பூண்டுள்ளது. அதற்காக, வருங்காலத்தில் அமையவுள்ள ஆணைக்குழுக்களும், அதிகாரிகளும் இக்கடப்பாட்டினை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட அரச முகவர்களதும் திணைக்களங்களதும் பூரண ஒத்துழைப்புடன் தமது கருமங்களையும் கடமைகளையும் மேற்கொள்வதற்காக வழிகளையும் OMP, அதன் நிறைவேற்று உறுப்பினர்கள், அலுவலர்கள், சிவில் சமூக நிறுவனங்கள், காணாமல் போன ஆட்களின் குடும்பங்கள், பெற்றோர்கள் ஏற்படுத்தியுள்ளர்.

தவிசாளர்,

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

## 1. முன்னுரை

இலங்கையில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) தாபிக்கப்பட்டது காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள் பற்றிய சிக்கல் வாய்ந்ததும் ஆழ்ந்த உணர்வுபூர்வமானதுமான பிரச்சினையினைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் கொண்டுள்ள சிரத்தையைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற மகத்தான மைற்கல்லாகத் திகழ்கின்றது. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல், கருமங்களை ஆற்றுதல்) சட்டம் (OMP சட்டம்) 2016 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அது நீண்டு நிலைத்துள்ள இப்பிரச்சினையை எதிர்கொள்வதற்கு தேசம் கொண்டுள்ள அர்ப்பணிப்பினைப் படம்பிடித்துக்காட்டுகின்றது.

வினைத்திறன் மிக்க அனுசரணையினை அங்கீகரித்து 2017 ஆம் ஆண்டு OMP சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதாவது அரச சார்பற்ற நிறுவனங்களுடன் (NGOs) ஒப்பந்தங்களை மேற்கொள்வதனை அது ஏதுவாக்கியது. இச்சட்டத் திருத்தம் இன் ஆதிக்கங்களை மேம்படுத்துவதையும் கீர்த்திமிக்க அரச சார்பற்ற நிறுவனங்களின் நிபுணர்களையும் வளங்களையும் ஒன்றிணைக்கின்ற தொடர்பினை விரிவுபடுத்துவதையும் நோக்காகக் கொண்டிருந்தது.

OMP 2018 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாகத் தாபிக்கப்பட்டது. காணாமல் போன ஆட்கள் பற்றிய அனைத்து வகையிலான வழக்குகளையும் கையாள்வதற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றும் இலங்கையின் முதன்மை நிறுவனமாக இது தாபிக்கப்பட்டது. அரசாங்கம் வேளாவேளைக்கு அவ்வப்போது நிறுவனங்களை நிறுவுகின்ற பொறிமுறைகளையும் விசாரணை ஆணைக்குழுக்களையும் கடந்து நிரந்தரமானதாகவும் சுயாதீனமானதாகவும் இயங்குகின்றதொரு அரச நிறுவனமாக என்ற நிலையை நோக்கி அடிப்படையானதொரு மாற்றத்தை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளதை இவ்வலுகம் தாபிக்கப்பட்டது எடுத்துக்காட்டுகின்றது.

முந்தைய பொறிமுறைகள் மூலம் பெறுமதிமிக்க பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் தமது நேசத்திற்குரிய உறவுகளைத் தேடி அவர்கள்தம் எண்ணற்ற குடும்பங்கள் இடைவிடாது கேட்கின்ற கேள்விகளுக்கு மறுமொழியளிக்கும் விதமாக அவை அமையவில்லை. முரண்பாடுகள், அரசியல் கலகங்கள், சமூகவியற் குழப்பங்கள் அல்லது வலிந்து காணமலாக்கப்படுதல் ஆகிய காரணங்களுடன் தொடர்புண்டு காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்ட ஆட்களது விதிகளையும் அமைவிடங்களையும் தெளிவுபடுத்துவதன் மூலமாக இத்தகைய நன்கறியப்பட்ட பரந்துபபட்ட ஏக்கத்தினைத் தீர்த்துவைப்பதற்கு OMP விளைந்துள்ளது.

முதலாவது தவிசாளராகிய சனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் அவர்களது வழிகாட்டலின் கீழ் மற்றும் தற்போதைய தவிசாளர் மகேஷ் கட்டுலந்த அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் தனது வினைத்திறன் மிக்க மற்றும் பதிலிறுக்கும் தன்மை மூலமாக அடுத்தடுத்து வந்த குழுக்களின் ஊடாக செயற்பாடுகளை மேற்கொண்டு OMP வளர்ச்சி கண்டுள்ளது. தற்சமயம் இயங்கிக்கொண்டிருக்கின்ற OMP இன் மூன்றாவது நிர்வாகக் குழு இலங்கையில் பாதிப்புற்றுள்ள காணாமல் போன ஆட்களது குடும்பங்களுக்கான உண்மை, நீதி, நல்லிணக்கம் போன்றவற்றை நாடிச் செல்கின்ற இலக்கினைத் தொடர்ந்து வருகின்றது.

காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களது குடும்பங்கள் நாடுகின்ற உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களை ஆற்றித்தேற்றுவதற்கும் உரிய தனது அர்ப்பணம் மிகுந்த தனது OMP செயற்பாட்டில் பற்றுறுதியாக உள்ளது. OMP இன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதிலும் மட்டிட முடியாத இழப்புகளின் மூலம் அல்லலுற்ற ஆட்களை அணுகுவதிலும் OMP எதிர்கொண்ட சவால்கள், நிலையான தீர்மானங்கள் போன்றவற்றை இவ்வாண்டு அறிக்கை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்றது.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட முறைப்பாடுகளிலிருந்து 6000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமான விசாரணைகளை 2022 ஆம் ஆண்டில் அதிகளவில் நடத்தியுள்ளது. ஏற்கனவே பெற்றிருந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை வினைத்திறனான முறையில் மேற்கொள்வதில் கவனம் செலுத்துவதற்கு ஏதுவாக தலைமைக் காரியாலயத்திலும் பிராந்திய காரியாலயங்களிலும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் முதல் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வது நிறுத்தி வைக்கப்பட்டதன் பிற்பாடும் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின் செயன்முறைகளை முன்நகர்த்திச் செல்வதற்கும் நாடு முழுவதிலும் 2000 விசாரணைக் குழுக்களை அமைத்து நடிவடிக்கை மேற்கொள்வதற்கின்ற செயல்வலு மிக்க ஆண்டாக 2022 ஆம் ஆண்டை ஆக்கி OMP செயற்பட்டுள்ளது.

## 2. அறிமுகம்

குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கும் கருமங்களுக்குமான செயன்முறைகளையும் வழிகாட்டல்களையும் வரையறுப்பதற்கும், காணாமல் போன ஆட்கள் பற்றிய தரவுத்தளத்தை உருவாக்குவதற்கும், காணாமல் போன ஆட்களது உறவுகளுக்கு ஆதரவு வழங்குவதற்கும், காணாமல் போன ஆட்கள் பற்றிய தேடுதலையும் அவர்களைக் கண்டறிதலையும் மேற்கொள்வதற்கும் OMP சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புபடுகின்ற அல்லது நேரிடுகின்ற அனைத்து விடயங்களையும் வழங்குவதற்கும் 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல், கருமங்களை ஆற்றுதல்) சட்டம்[12] 2016 இல் நிறைவேற்றப்பட்டது. இத்தகைய நிவாரணப் பணிக்காக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்[13] சிரத்தையுடனும் ஒருங்கிணைப்புடனும் செயற்படுகின்றது. அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைப்பின் பேரில் ஏழு ஆணையாளர்களை நியமித்து தனது நடவடிக்கைகளை 28.02.2018 ஆந் திகதியன்று OMP மேற்கொண்டது.

காணாமல் போன ஆட்களைச் சூழவுள்ள சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்துவதும், காணாமல் போதல் மீண்டும் நிகழாமல் இருப்பதனை உறுதி செய்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்குவதும், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களினதும் அவர்களது குடும்பங்களினதும் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதும், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுக்கான பரிகாரத்தை வழங்குவதற்கான வழிவகையினை இனங்காண்பதும், கைவசம் உள்ள சகல தகவல்களையும் தரவுத்தளத்தில் ஒருமுகப்படுத்துவதும் OMP இன் கடப்பாடாகும்.[14]

மேலும், பாதிக்கப்பட்டோர் மேற்கொள்ளும் முறைப்பாடுகளை ஏற்று அவற்றுக்குக் காணப்படாமைக்கான சான்றிதழ் (CoA) வழங்குவதற்குப் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தை ஏதுவாக்குவதற்காக அது தொடர்பிலான கடிதங்களைக் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களது உறவுகளுக்கு வழங்குதல், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுடைய உறவுகளுக்கு அல்லது குடும்பங்களுக்கு உளரீதியானதும் சமூகரீதியானதுமான ஆதரவு உட்பட ஆயினும் அதற்குள் மாத்திரம் நின்றுவிடாது நிருவாகரீதியான ஆதரவினையும் நலனோம்பு சேவைகளையும் வழங்குதல் அல்லது வசதியளித்தல், காணாமல்

[12] இதனகத்துப் பின்னர் OMP சட்டம் என்று குறிப்பீடு செய்யப்படும்
[13] இதனகத்துப் பின்னர் OMP என்று குறிப்பீடு செய்யப்படும்
[14] OMP சட்டம், பிரிவு 10

போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுக்கு அல்லது அவர்களுடைய உறவுகளுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான முறைமை ஒன்றினை விருத்திசெய்து அமுல்படுத்துதல், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுடன் தொடர்புடைய சகல விவரங்களையும் உள்ளடக்குகின்ற தரவுத்தளம் ஒன்றினை உருவாக்குதலும், முகாமை செய்தலும், பேணி வருதலும், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் தொடர்பிலான காரணங்களையும், சம்பவங்களையும்? அதன் விளைவுகளையும் பற்றிப் பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல், பொது மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் தாம் பொருளாதார ஆதரவினையும் உளரீதியான ஆதரவினையும் சமூகரீதியான ஆதரவினையும், சட்டரீதியான ஆதரவினையும், நிருவாக ரீதியான ஆதரவினையும் அணுகுவதற்குமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன போன்ற கருமங்களையும் கடமைகளையும் ஆற்றுவது OMP இற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளது.[15]

பால்மை ரீதியான நியமங்களையும் வழிகாட்டல்களையும் வகுப்பதற்கும், பணியாளர்களை நியமிப்பதற்கும் நீக்குவதற்கும், தனது வினைத்திறனான செயற்பாட்டுக்கு அவசியப்படும் பிரிவுகளை அமைத்துக்கொள்வதற்கும் பரந்தளவில் OMP அதிகாரம் கொண்டுள்ளது.[16] மேலும், காணாமல் ஆக்கப்படுகின்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தவிர்ப்பது பற்றிய, காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூருவதற்கும் அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டமையை ஏற்றுக்கொள்வதற்குமான வழிகளும் முறைமைகளும் பற்றிய, அடையாளங்காண முடியுமான மற்றும் அடையாளங்காண முடியாத மனித எச்சங்களைக் கையாளுதல் பற்றிய, காணாமல் போன ஆட்களது பிரச்சினைகள் பற்றிப் பொது மக்கள் அறிந்துகொள்வதற்கான தகவல்கள் வெளியீடு செய்வது பற்றியவை உட்பட பரந்துபட்ட சிக்கல்கள் தொடர்பில் ஏனைய அரச அதிகாரிகளுக்கும் பரிந்துரைகள் மேற்கொள்வதற்கும் காணாமல் போன ஆட்கள் பற்றி தேசிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் போன்றவற்றை உருவாக்குவதற்குமான பரிந்துரைகளை வழங்குவதற்கும் OMP இற்கு அதிகாரம் உண்டு.[17]

OMP தனது புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கான நோக்கம் கருதி முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும், விசாரணைகளை மேற்கொள்வதற்கும் காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களது அமைவிடங்களைத் துலக்குவதற்கும் அச்சட்டம் OMP இற்கு அதிகாரம் அளித்துள்ளது. OMP இல் பிரசன்னமாகுமாறு எவருக்கேனும் அழைப்பாணை அனுப்புதல் அல்லது ஏதேனும் ஆவணம் அல்லது பொருள் சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள்விடுத்தல், உணர்ச்சியைக் கிளப்புகின்ற தகவல்களைத் தனிப்பட்ட வகையில் ஏற்றுக்கொள்வதற்கான செயன்முறை ஒன்றை உருவாக்குதல், இரகசியம் பேணுதல் வேண்டும் என்னும் நிபந்தனையின் கீழ் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல், அகழ்வுப் பணியின்போதான ஒரு கண்காணிப்பளராக செயற்படுகின்ற அதேவேளை அகழ்வுப் பணி ஒன்றை மேற்கொள்வதற்கான அனுமதியை நாடி நீதிவான் நீதிமன்றம் ஒன்றுக்கு விண்ணப்பம் மேற்கொள்ளுதல், ஏதேனும் அரச துறையின் துணையை நாடி வேண்டுகோள்விடுத்தல், ஆணை எதுவுமின்றி ஏதேனும் தடுப்புக் காவல் தலத்தினைத் தேடுதல், குறித்த சட்டம் ஒன்றை அமுல்படுத்துகின்ற வேளையில் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களை அறிக்கையிடல் அல்லது முறையாகக் கவனம் செலுத்தப்பட்டதன் பின்னர் ஓர் அதிகாரிக்கு எதிராக வழக்குத்தொடருதல் உட்பட சம்பந்தப்பட்ட விடயங்களைப் பரிசீலனை

---

[15] OMP சட்டம், பிரிவு 13
[16] OMP சட்டம், பிரிவு 11
[17] OMP சட்டம், பிரிவு 13(1) (ஓ)

செய்வதற்கு அவசியப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் அச்சட்டம் OMP இற்கு அதிகாரம் வழங்கியுள்ளது.[18]

**3. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் நோக்கங்கள்:**

அவசியப்படுகின்ற நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துதல்:

அ) காணாமல் போன ஆட்களைத் தேடுவதற்கும் கண்டறிவதற்குமான பொருத்தமான பொறிமுறைகளை வழங்குதல் மற்றும் அத்தகைய ஆள் காணாமல் போனமைக்கான சூழ்நிலைகளை விளக்குதலும் அவர்களது விதிகளைத் தெளிவுபடுத்துதலும்

ஆ) சட்டத்தின் விளக்கத்தின்பாற்பட்டு 'காணாமல் போன ஆட்கள்' பற்றிய சம்பவங்களைக் குறைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பரிந்துரைகளை வழங்குதல்

இ) சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டவாறு காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களது உறவுகளது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாத்தல்

ஈ) அத்தகைய காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களது உறவுகள் பரிகாரம் பெற்றுக்கொள்வதற்கான நிவாரண வழிகளைத் தகுந்தவாறு இனங்காணுதல்.

**4. கடப்பாடு**

அ) காணாமல் போன ஆட்களைத் தேடுதலும் கண்டறிதலும் மற்றும் அவர்களுக்கான பொருத்தமான பொறிமுறைகளை இனங்காணுதல் மற்றும் அத்தகைய ஆள் காணாமல் போனமைக்கான சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்துதல்,

ஆ) காணாமல் போன ஆட்கள் பற்றிய சம்பவங்களைத் தீர்த்துக்கொள்வதற்கான பரிந்துரைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்குதல்

இ) காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களின் உறவினர்களது உரிமைகளையும் நலன்களையும் சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டவாறு பாதுகாத்தல்

ஈ) காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு உரித்துடைய பரிகாரங்களை வழங்குவதற்கான வழிவகைகளை இனங்காணுதல் மற்றும் அது குறித்து அந்தக் காணாமல் போன ஆளுக்கு (உயிருடன் இனங்காணப்படின்) அல்லது அந்தக் காணாமல் போன ஆளின் உறவினருக்குத் தகவல் வழங்குதல்

உ) காணாமல் போன ஆட்கள் பற்றி தற்சமயம் மேற்கொள்கின்ற செயன்முறை மூலமாகப் பெறப்படுகின்ற தகவல்களை அல்லது ஏனைய நிறுவனங்கள், நிறுவகங்கள், அரசாங்கத் திணைக்களங்கள், விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் முந்தைய செயன்முறைகள் மூலமாகப் பெற்றுக்கொண்ட தரவுகளை

[18] OMP சட்டம், பிரிவு 12

ஒன்றுதிரட்டுதலும் OMP சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தரவுத்தளத்தில் கைவசம் உள்ள தரவுகளை ஒருமுகப்படுத்துதலும்

ஊ) சட்டத்தின் கீழ் ஈட்டிக்கொள்ளத்தக்க அவசியப்படுகின்ற நோக்கங்கள் அனைத்துக்கும் தேவையான விடயங்களை மேற்கொள்ளுதல்

போன்ற கடப்பாடுகளை OMP கொண்டுள்ளது.

மேலும், காணாமல் போன ஆள் ஒருவர் அவ்வாறு காணாமல் போன காலப்பகுதி எது எவ்வாறிருப்பினும் அத்தகைய காணாமல் போன ஆள் குறித்து OMP கொண்டுள்ள கடப்பாடு பரந்துபட்டு அமைதல் வேண்டும்.

**5. தூர நோக்குகளும் நிறுவனஞ்சார் முன்னுரிமைகளும் (செயலாற்றற் கொள்கைகள்)[19]**

**தூர நோக்கும் பணிக்கூற்றும்**


| | | | |
|---|---|---|---|
| எமது தூரநோக்கு | *சகலரும் நீதியை அனுபவிக்கக்கூடியதும் நல்லிணக்கச் செயன்முறை வளம்பெற்றதுமான ஒரு தேசம்* | | |
| எமது பணிக்கூற்று | *தேசிய நல்லிணக்கப் பொறிமுறையின் ஓர் அங்கமாக காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களதும் அவர்களுடைய உறவுகளதும் உரிமைகளைப் பாதுகாத்தல்* | | |
| அடிப்படையான அடைவுகள்<br><br>எதிர்காலத்தில் ஆட்கள் காணாமல் போவது மற்றும் காணாமல் ஆக்கப்படுவது மீண்டும் நிகழாமை மற்றும் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட மக்களது உரிமைகளை உறுதிப்படுத்தல் | **அடைவு 1: (நோக்கம்)**<br><br>**தடுப்பு நடவடிக்கைகள்**<br><br>சிறுவர்கள், இளையவர்கள், இளவயதினர் போன்றோர் மீண்டும் மீண்டும் காணாமல் போவதுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் குறித்து தடுப்பு உபாயங்கள் மேற்கொள்வதன் மூலமாகவும், கல்வியூட்டுவதன் | **அடைவு 2:**<br><br>**பாதுகாப்பு நடவடிக்கைகள்**<br><br>சிறுவர்கள், இளையவர்கள், இளவயதினர் போன்றோர் காணாமல் போவதுடன் தொடர்புபட்ட சம்பவங்களுக்கு உள்ளூர் முகவர்கள் ஒழுங்கமைந்த வகையிலான இடர்வரைவு எதிர்வினையாற்றுவதன் மூலம் காணாமல் | **அடைவு 3:**<br><br>**பரிகாரம் வழங்குவதற்கான ஏற்பாடு**<br><br>உடனுக்குடன் தொடர்புகொண்டு காணாமல் போனவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்குமான ஆதரவினை வழங்குதல் மற்றும் எவ்வாறு?, எங்கே? உதவியை நாடி ஆதரவைப் பெற்றுக்கொள்ள |

[19] OMP இன் மூலோபாயத் திட்டம் 2023-2025

| | | | |
|---|---|---|---|
| | மூலமாகவும் முற்காப்புத் தலையீடு மூலமாகவும் கணாமல் போகின்ற ஆட்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் | போபவர்களுக்கான தீங்கியல் இடர்களைக் குறைத்தல் மற்றும் அம்முகவர்கள் அத்தகைய ஆளைக் கண்டறிவதற்கு இணைந்து செயலாற்றுதல், உள்நாட்டு ரீதியாகவும் சர்வதேய ரீதியாகவும் முடிந்தளவு விரைவாக வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வருதல் | வேண்டும் என்பதை காணாமல் போனவர்களும் அவர்களது குடும்பங்களும் புரிந்துகொள்வதை உறுதிப்படுத்தல் |

## 6. பிராந்திய நிருவாகம்

கொழும்பு நகரத்தில் தலைமை அலுவலகத்தையும் பிராந்திய மற்றும் துணைப் பிராந்திய அலுவலகங்களையும் கொண்டு நாடு முழுவதிலும் OMP இயங்குகின்றது. பிராந்திய அலுவலகங்கள் 12 அமைக்க வேண்டும் என்பது OMP இன் கடப்பாடாக இருக்கின்ற போதிலும் தற்சமயம் பிராந்திய அலுவலகங்கள் ஐந்தையே கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று இவ்வறிக்கை ஆண்டில் கிளிநொச்சியில் நிறுவப்பட்ட பிராந்திய அலுவலகமாகும்.




பிராந்திய அலுவலகம் - மட்டக்களப்பு

இல. 124, மத்திய வீதி, மட்டக்களப்பு

தொ.பே: 065-222-4532/ 4534

பிராந்திய அலுவலகம் - யாழ்ப்பாணம்

இல. 124, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

தொ.பே: 021-2219414/ 9401

பிராந்திய அலுவலகம் - மன்னார்

இல. 5, நிலைய வீதி, மன்னார்

தொ.பே: 023-2222083/ தொலை நகல்: 023-2223929

பிராந்திய அலுவலகம் - மாத்தறை

இல. 54, தர்மாராம வீதி, மாத்தறை

தொ.பே: 041-2244684/ 041-2224046

பிராந்திய அலுவலகம் - கிளிநொச்சி

ஏ9 வீதி, நீதி மன்ற அருகாமை, கிளிநொச்சி

தொ.பே: 021-2219400

## 7. நிகழ்வுகள் சார்ந்த இற்றைப்படுத்தல்

2022 ஆம் ஆண்டிற்குரிய மூலோபாயத் திட்டத்தினை மீள்பரிசீலனை செய்ததை அடுத்து OMP இன் தவிசாளர் திரு. மகேஷ் கட்டுலந்த அவர்களுடைய தூர நோக்கின் கீழ் 2022 ஆம் ஆண்டிற்குரிய நிகழ்வுகள் சார்ந்த மூலோபாயமாகப் பின்வருவன அமைந்திருத்தல் வேண்டும் என்று OMP ஒழுங்கமைத்துள்ளது.

தவிர்ப்பு நடவடிக்கைகள் - ஆட்கள் காணாமல் போகின்ற எண்ணிக்கையினை விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் குறைத்தல் மற்றும் மீண்டும் மீண்டும் சிறுவர்களும் இளையவர்களும் இளவயதினர்களும் காணாமல் போகின்ற சம்பவங்களை ஆரம்பத்திலேயே தலையீடு செய்தல்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் - காணாமல் போன ஆளைக் கொண்டு வந்து சேர்ப்பதற்காக உள்ளூர் முகவர்கள் இலக்குள்ள, இடர்வரைவு கொண்ட நடவடிக்கைகளை வழங்குவதனை உறுதிப்படுத்துவதன் மூலமாக ஆட்கள் காணாமல் போவதற்கான தீங்கு இடர்கள் மட்டுப்படுவதை நிர்ணயித்தல் மற்றும் உள்நாட்டு அளவிலும் சர்வதேய அளவிலும் வழக்குகளை விரைவாகப் பூர்த்தி செய்தல்.

நிவாரணம் வழங்குதல் அல்லது பரிகாரம் வழங்குதலுக்கான நடவடிக்கைகள் - காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் தாம் உதவியையும் ஆதரவையும் எங்கு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்கான வகையில் விரைவாகத் தொடர்புகொண்டும் உறுதிப்படுத்தியும் செயற்படுவதன் மூலமாகக் காணாமல் போன ஆட்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஆதரவினையும் வழிகாட்டலையும் வழங்குதல்.

OMP இற்குக் கிடைத்து வருகின்ற அதிகரித்த அளவிலான ஆதரவு மற்றும் இலங்கைக்கு உள்ளேயும் இலங்கைக்கு வெளியிலும் உள்ள பலதரப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுடன் OMP கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்கள் ஆகியன இவ்வருடம் முழுவதும் OMP பின்பற்றியுள்ள சிரத்தையின் தாக்கத்தினை எடுத்துக்காட்டவுள்ளது.

## 8. சட்டம், கொள்கை, ஆய்வுப் பிரிவு

காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களதும் அவர்களது உறவுகளினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களது

உறவினர்கள் பொருளாதார ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், சட்டரீதியாகவும் நிருவாக ரீதியாகவும் ஆதரவை அணுகுவதற்கான வசதிகளை மேற்கொள்ளுவதற்கும் OMP கடப்பாடுடையதாகும்.[20] மேலும், காணாமல் ஆக்கப்படுகின்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தவிர்ப்பதை உறுதிப்படுத்துவதற்கும், மனித எச்சங்களைக் கையாளுதல் பற்றியும், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களினதும் மற்றும் அவர்களது உறவினர்களதும் சமூக பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கும் அரச அதிகாரிகளுக்குப் பரிந்துரைகளை வழங்குவதற்கு OMP அதிகாரம் பெற்றுள்ளது.[21]

மேற்குறித்த கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக காணப்படாமைக்கான சான்றிதழ்கள் தொடர்பில் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களது குடும்பங்கள் அக்காணப்படாமைக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு இடைக்கால அறிக்கைகளை வழங்கியும், 2019 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த இடைக்கால நிவாரணத்தை நடைமுறைப்படுத்தியும், மனித எச்சங்களை விசாரிப்பதற்கான நியாயாதிக்க அதிகாரத்தினைப் பிரயோகித்தும், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுடைய குடும்பங்களுக்கான கொவிட் நிவாரணத்தினை வழங்கியும், தனிப்பட்ட ஆட்கள் சட்ட மற்றும் நிருவாக உதவியை நாடி மேற்கொண்டிருந்த வேண்டுகோள்களுக்கு மறுமொழி அளித்தும் சட்டரீதியானதும் கொள்கை ரீதியானதுமான பரிந்துரைகளை OMP மேற்கொண்டுள்ளது.

சட்டம், கொள்கை மற்றும் ஆய்வுப் பிரிவானது 2022 ஆம் ஆண்டில் விசாரணைகளையே அதிகளவில் மேற்கொண்டுள்ளது. விசாரணைகளை நடத்திச் செல்கின்ற செயன்முறையினை இலகுவாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மாற்றிக்கொள்வதற்கு 2022 பெப்ரவரி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை[22] பாகம் பாகமாக வகைபிரித்து இப்பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அத்தகைய பாக ரீதியான வகைப்பாடு பின்வருமாறு

1. பாகம் 1: 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான முறைப்பாடுகள் அனைத்தும்
2. பாகம் 2: 1980- 2000 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட முறைப்பாடுகள் அனைத்தும்
3. பாகம் 3: 1980 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட முறைப்பாடுகள் அனைத்தும்


2022 ஆம் ஆண்டு நடைபெற்ற விசாரணைகளில் பாகம் 1 ஐச் சேர்ந்த வகைப்பாடே உச்சபட்ச அளவில் காணப்படுகின்றது. ஏனெனில் பாகம் 1 வகைப்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகளுள் அதிகமானவை அண்மித்தவையாகவும், அவற்றின் ஆவணப்படுத்தல் உள்ளபடி உள்ளவாறே காணப்படுவதாகவும் கண்டறியத்தக்க வகையில் உள்ளனவாகவுமே காணப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகங்கள் அனைத்தையும் உள்ளடக்கி அவ்வப் பிராந்தியங்களிலும் தலைமை அலுவலகத்திலுமாக 2000 இற்கும் மேற்பட்ட விசாரணைகளை வெற்றிகரமாக OMP நடத்தியுள்ளது. வரும் ஆண்டுகளில் வினைத்திறனான வகையில் தனது முனைப்புகளைத் தொடர்வதற்கு நாட்டம் கொண்டுள்ளது.

---

[20] OMP சட்டம், பிரிவு 2 (ஆ), 10 (இ), 13 (உ)
[21] OMP சட்டம், பிரிவு 13 (ஓ) (i), (iii), (viii)
[22] OMP சட்டம், பிரிவு 12

நீண்ட மற்றும்

பெருந்தொற்று, கால முடக்கம்




தனிமைப்படுத்தல் போன்றவற்றிலிருந்து நாடு மீண்டு வழமைக்குத் திரும்பிக்கொண்டிருந்த அதேவேளை வெளி மாவட்டங்களில் அதிகளவில் விசாரணைகளை நடத்துவதற்கு பெற்றுக்கொண்ட வாய்ப்பு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது.

### 8.1 விசாரணைச் செயன்முறை

OMP இன் சட்டம், கொள்கை மற்றும் ஆய்வுப் பிரிவானது அலுவலகத்தின் செயற்பாட்டின் ஓட்டத்தையும் தகவல்களின் ஓட்டத்தையும் இலகுபடுத்தும் வகையில் விசாரணைக்கு முற்பட்டவை என்றும் விசாரணைக்குப் பிற்பட்டவை என்றும் செவ்வை பிரித்தல் செயன்முறை ஒன்றை உள்வாங்கி செயற்படுகின்றது.

ஆதரவு வழங்குதல் பிரிவினால் பாதிக்கப்பட்டவர் சார்பில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்படின் அம்முறைப்பாட்டுக்கென்று பிரத்தியேக கோப்பு ஒன்று ஒதுக்கப்படும். அக்கோப்பில் அம்முறைப்பாட்டின் அடிப்படைத் தகவல்களும் குறிப்பிட்ட விடயம் சார்ந்த ஆவணங்களும் உள்ளடக்கப்படும். முறைப்பாட்டாளரின் மாவட்டம் சார்ந்து கோப்பு பேணப்படும். விசாரணை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அக்கோப்பு தரவு முகாமைத்துவப் பிரிவினால் விசாரணைக் குழுவிடம் தீர்வு நாடி முன்வைக்கப்படும். அக்கோப்புகள் சட்டப் பிரிவினால் பரிசீலிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படு விசாரணை நடைபெறவுள்ள மாவட்டத்திலுள்ள குறித்த பிராந்திய அலுவலகத்துக்கு அல்லது பிரதேச செயலகத்துக்கு பொதியிட்டு அனுப்பிவைக்கப்படும்.[23] மேற்குறித்தவாறு ஒரு கோப்பு செயன்முறைப்படுத்தப்பட்டால் முறைப்பாட்டாளருக்கு விசாரணை குறித்துத் தெரியப்படுத்திக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு தொலைபேசி அழைப்பு ஊடாகவும் அவருக்கு நினைவுபடுத்தல் ஒன்று மேற்கொள்ளப்படும்.

விசாரணைக் குழுமம் வழக்கமாக 3- 4 பேரைக்கொண்டு அமையும். அதில் ஒருவர் தலைமைதாங்கி விசாரணை நடத்துவதுடன் ஏனையோர் துணை விசாரணையாளர்களாக இருப்பர். விசாரணைக் குழுமங்களுக்குத் தலைமை தாங்கும் அதிகாரிகள் சட்டம் /விசாரணை அகிய துறைகளில் துறைசார்ந்தவர்களாகக் காணப்படுவதுடன் OMP இன் சட்டப் பிரிவின் பரிந்துரையின் பேரில்

[23] பிரதேச செயலகத்துக்கு அல்லது பிராந்திய அலுவலகத்துப் பொதியிட்டு அனுப்புதல் சாத்தியப்படாத சந்தர்ப்பத்தில் தேவைப்படுகின்ற விவரங்களை தரவுத்தளத்திலிருந்து அவ்வலுவலகங்கள் பெற்றுக்கொள்வதற்கு வசதியளிக்கப்படும்

நிர்வாகக் குழுவினால் நியமிக்கப்பட்டவர்களாக இருப்பர். இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக விசாரணைகளை ஒரேயடியாக மேற்கொள்வதற்கு குழுமங்கள் விளையும்.

விசாரணைக்கு சமுகம் தருகின்ற வேளையில் பின்வரும் ஆவணங்களைக் கொண்டுவருமாறு முறைப்பாட்டாளர்கள் வேண்டப்படுவர்:

1. OMP தரவுப் படிவம்
2. காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆளின் தேசிய அடையாள அட்டை/ சாரதி அனுமதிப் பத்திரம்
3. காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4. காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆளின் புகைப்படம்
5. முறைப்பாட்டாளரின் தேசிய அடையாள அட்டை
6. முறைப்பாட்டாளரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
7. சத்தியக்கடதாசி
8. முறைப்பாட்டாளரால் சமர்ப்பிக்கப்படும் கடிதம்
9. காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆளின் திருமணப் பதிவு/ குழந்தைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
10. (காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆளுடனான உறவுமுறையை உறுதிப்படுத்துகின்ற) சத்தியக்கடதாசி
11. நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தி கிராம உத்தியோகத்தரினால் ஒப்பமிட்டு வழங்கப்படும் ஆவணங்கள்
12. நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தி பிரதேச செயலகத்தினால் ஒப்பமிட்டு வழங்கப்படும் ஆவணங்கள்
13. பொலிஸ் முறைப்பாட்டின் பிரதி
14. ICRC/ UNWG மூலம் வழங்கப்பட்ட பத்திரங்கள்
15. ஏனைய ஆணைக்குழுக்கள் மூலம் வழங்கப்பட்ட பத்திரங்கள் /ஆவணங்கள்
16. காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆளின் மரணப் பதிவு
17. திருமணத்தைப் பதிவுசெய்துள்ள ஆவணம்
18. காணப்படாமைக்கான சான்றிதழ்
19. காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆள் பற்றிய செய்தித்தாள் குறிப்புகள்
20. ஏனைய தொடர்புடைய ஆவணங்கள்
21. ஏனைய ஆவணங்கள்

அதனையடுத்து விசாரணைக் குழாம் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றிய தகவல்களையும் அத்தகைய காணாமல் ஆக்கப்படுதல் ஏற்பட்ட நிகழ்வுகளைப் பற்றிய தகவல்களையும் சேகரிப்பதை முன்னெடுக்கும். இதனுள் காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றிய தனிப்பட்ட தகவல்கள், அந்த ஆள் காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் அவரை இறுதியாகக் கண்ட நாள்/ சம்பவம் பற்றிய தகவல்கள் போன்றவை உள்ளடங்கும். காணாமல் போன ஆட்களின் உறவினர்கள் மற்றும் முறைப்பாட்டாளர் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டே புலன் விசாரணை மேற்கொள்ளப்படும்.

விசாரணையின் போது முறைப்பாட்டாளருடன் மேலதிக சாட்சி ஒருவர் பிரசன்னமாக இருக்குமாறு விசாரணைக் குழாம் வேண்டுகோள்விடுக்கும். முறைப்பாட்டாளரின் சமர்ப்பணத்தை அடுத்து சாட்சியாளர் விசாரிக்கப்படுவார். அவ்விசாரணையில் முறைப்பாட்டாளரிடம் கேட்கப்பட்ட அதே கேள்விகள் சாட்சியிடமும் கேட்கப்பட்டு தகவல்கள் ஒன்றுக்கொன்று ஒத்துவருகின்றனவா என்பது உறுதிப்படுத்தப்படும்.

விசாரணையின் பின்னர் முறைப்பாட்டாளருக்கு எத்தகைய விடயங்களை வழங்க வேண்டும் என்று விசாரணைக் குழாம் முடிவெடுக்கும். அவ்வாறு வழங்கப்படும் விடயங்களாக காணப்படாமைக்கான சான்றிதழ், மரணப் பதிவு, இழப்பீடு அல்லது மீட்சிக் கொடுப்பனவு மற்றும் ஏனைய உளரீதியானதும் சமூக ரீதியானதுமான உதவி போன்றவை காணப்படுகின்றன.

அதன் பின்னர் விசாரணைக் குழாம் இரகசியம் பேணத்தக்க வகையிலான அறிக்கையினைக் கோப்பிடும். விசாரணைக் குழாமிலுள்ள உறுப்பினர்கள் தமது நம்பிக்கையீனத்தினை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குகின்ற வகையிலான ஏகமனதான ஒப்புதலுடன் இவ்வறிக்கை தயாரிக்கப்படுகின்றது, நடைமுறையில் இது அரிதாகவே காணப்படுகின்றது.

OMP இன் சட்ட நியாயாதிக்கத்திற்குட்பட்ட வகையில் மூன்று வகையிலான முறைப்பாடுகளைப் பிரதானமாகப் பெறுவது OMP இன் கடப்பாடாகும். ஆவையாவன

1. உள்நாட்டு யுத்தத்தின் போது காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றிய முறைப்பாடு
2. பெருவாரியான அரசியல் கலகத்தின் போது அல்லது சமூகக் கலகத்தின் போது காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றிய முறைப்பாடு
3. அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றிய முறைப்பாடு

முறைப்பாடுகள் OMP இன் கடப்பாட்டுக்கு உட்பட்டவையாக உள்ளதா இல்லையா என்பதை விசாரணை அறிக்கைகள் முடிவுறுத்தி அவர்கள் வழங்கிய பரிந்துரைகளைச் சேர்த்து அதன் பின்னர் கோப்புகள் சட்டப் பிரிவுக்குப் மீண்டும் பாரப்படுத்தப்படும். தரவுத்தள இற்றைப்படுத்தல்கள் நிறைவடைந்ததன் பின்னர் விசாரணைக் குழாமில் பணியாற்றிய உறுப்பினர்களுக்கு அவர்கள் எடுத்துக்கொண்ட நேரத்தையும் பிரயத்தனத்தையும் கருத்திற்கொண்டு அவர்களுக்கான ஊதியம் நிறைவாக வழங்கி வைக்கப்படும்.

முறைப்பாட்டாளர்களுக்கும் சாட்சிகளுக்கும் அவர்கள் விசாரணை நடைபெறுகின்ற இடத்திற்கு வருகை தந்தமைக்கான பிரயாணச் செலவும் வழங்கப்படுகின்றது.

## 8.2 சவால்கள்

இக்காலப்பகுதியில் விசாரணைகளை மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் OMP எதிர்கொண்ட பிரதான சவால்களுள் ஒன்றே விசாரணைகள் நடைபெறுகின்ற இடங்களுக்கு முன்பாக இனந்தெரியாத ஆட்களும் குழுக்களும் அடுத்தடுத்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களாகும். முறைப்பாட்டாளர்களை விசாரணைகளில் கலந்துகொள்ளவிடாது அக்குழுக்கள் மிகக்கடுமையாக அவர்களைத் தடுத்துள்ளனர். நட்டஈடு, இழப்பீடுகள் தொடர்பில் சர்வதேச நீதி வேண்டிக் கோரிக்கை விடுகின்ற தவறான கருதுகோளே அத்தகைய நியாயபூர்வமற்ற ஆர்ப்பாட்டங்களுக்கான காரணங்களாகும். அவ்வார்ப்பாட்டங்களுக்கு மத்தியிலும் சிற்சில சந்தர்ப்பங்களில் அமைதியான முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்தியும் விசாரணைச் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலதிகமாக, சில முறைப்பாட்டாளர்கள் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறியுள்ளமையையும் OMP இனங்கண்டுள்ளது. அதாவது ஆவணங்களை வழங்குவது தொடர்பில் அம்முறைப்பாட்டாளர்களிடம் தமது முறைப்பாடுகளுக்கு மேலும் வலுச்சேர்க்கின்ற போதிய அளவிலான துணைசேர் ஆவணங்கள் காணப்படாமை ஒரு குறைபாடாகவும் முறைப்பாடு குறித்த மேலதிக செயன்முறையை இலகுவான முறையில் கொண்டு செல்வதற்குத் தடையாகவும் இனங்காணப்பட்டுள்ளது.

8.3 இதுவரையிலான முன்னேற்றம்

பாகம் 1 இல் வகை பிரிக்கப்பட்ட மொத்த முறைப்பாடுகள் 6,025 ஆகும். 31.12.2022 வரையில் 2647 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2110 முறைப்பாடுகள் 2022 இற்குள் நிறைவடைந்துள்ளன. அவ்விசாரணைகளின் பின்னர் 269 கோப்புகள் பதிவாளர் நாயகத்துக்குப் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் 218 கோப்புகள் இழப்பீடுகளுக்கான அலுவலகத்துக்கு பரிந்துரைகள் மேற்கொண்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் பாகம் 1 இன் கீழ் இன்னும் 3378 முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. அவை அடுத்த ஆண்டுகளில் முழுமையாக நிறைவு செய்யப்படும். கொவிட் இற்குப் பின்னரான சூழ்நிலையினைக் கருத்திற்கொள்கையில் இத்தகைய ஒரு தொகை என்பது சாத்தியமானதாக உள்ளதும் மக்கள் மாவட்டத்துக்கு மாவட்டம் பயணம் செய்வதற்கான சுதந்திரம் காணப்படுவதும் நம்பகமான வாதமாகும்.

## 9. தரவுகளைப் பதிவு செய்யும் பிரிவு

ஒருங்கமைந்த தரவுத்தளமொன்றை வினைத்திறனான முறையிலும் விளைதிறனான முறையிலும் பேணுவதில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தரவு முகாமைப் பிரிவு முக்கிய பங்கு வகிக்கின்றது. துல்லியமான ஆவணப்படுத்தலை உறுதிப்படுத்துவதும் முறைப்பாடுகளைக் கண்டறிதலும் அம்முறைப்பாடுகளின் முன்னேற்றங்களை விசாரணைச் செயன்முறை ஊடாக மேற்கொள்வதும் தரவு முகாமைப் பிரிவின் அடிப்படையான பொறுப்பாகக் காணப்படுகின்றது.

தரவு முகாமைப் பிரிவினால் முகாமை செய்யப்படுகின்ற தரவுத்தளம் OMP பெற்றுக்கொண்ட பலதரப்பட்ட முறைப்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. அம்முறைப்பாடுகளுள் OMPஇற்கு நேரடியாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள், ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் காவல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் என்று பல முறைப்பாடுகள் உள்ளடங்குகின்றன. இத்தகைய பன்முகப்பட்ட தகவல் மூலங்களை ஒன்றுதிரட்டி தரவு முகாமைப் பிரிவானது காணாமல் போன ஆட்கள் பற்றிய வழக்குகளைத் தீர்ப்பதற்கான ஒருமுகப்பட்ட அணுகுமுறையினை வளப்படுத்துகின்ற சீரமைந்த தளம் ஒன்றினை உருவாக்குகின்றது.

2022 மார்ச் வரையில் இனால் நேரடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மொத்தமாக 21,374 என்பதை தரவுத்தளம் எடுத்துக்காட்டுகின்றது. இவ்வேளையில் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதற்கான பிரதான காரணம் தரவுத்தளத்தின் இயைபுறு தன்மையினைப் பேணுவதும் அதிலுள்ள முறைப்பாடுகளுக்கான விசாரணைச் செயன்முறையினைத் தொடங்குவதும் ஆகும். ஏனெனில் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் அல்லது உறவுகளின் இழப்பினால் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட ஆட்களுக்கான நீதியை வழங்குகின்ற நிறுவனமாகக் காணமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் காணப்படுகின்றது. இத்தகைய தரவுத் தகவற்களஞ்சியத்தினூடாக தரவு முகாமைப் பிரிவானது அம்முறைப்பாடுகளை இராணுவ நடவடிக்கையின்போது காணாமல் போனமை பற்றியவையா அல்லது போலியானவையா அல்லது OMP இன் கடப்பாட்டுக்குள் உள்ளடக்க முடியாதவையா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு 6,386 முறைப்பாடுகளை வகை பிரித்துள்ளது.

தரவுத்தளத்தினைத் துல்லியமான முறையில் ஒழுங்கமைத்தல், வகை பிரித்தல், பேணிக்காத்தல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துகின்றபடியினால் தரவு முகாமைப் பிரிவின் செயற்பாடுகள் அடிப்படையில் நிருவாகப் பிரிவினை ஒத்ததாகவே கொள்ளப்படுகின்றது. இவற்றுள் ஒவ்வொரு

பதிவேற்றத்திலும் துல்லியத் தன்மையினையும் பூரணத் தன்மையினையும் உறுதிப்படுத்தல், தனிப்பட்ட முறைப்பாடுகள் விசாரணைச் செயன்முறை ஊடாகக் கொண்டு செல்லப்பட வேண்டியவையாகக் காணப்படுகின்றபடியால் அவற்றின் நிலைப்பாடுகளையும் முன்னேற்றத்தையும் இற்றைப்படுத்துதல் ஆகியன உள்ளடங்குகின்றன.

OMP இன் நம்பகமான மற்றும் ஒருங்கமைந்த ஒரு தகவல் மூலமாக தரவுத்தளம் இருந்து வருவதை அர்ப்பணிப்புள்ள முயற்சிகளின் மூலமாக தரவு முகாமைப் பிரிவு உறுதிப்படுத்துகின்றது. காணாமல் போன ஆட்கள் பற்றிய முறைப்பாடுகள் தொடர்பில் OMP அர்த்தமுள்ள அகப்பார்வையை மேம்படுத்துவதற்கும், வழிமுறைகளை இனங்காண்பதற்கும், நன்கு ஆயந்தறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் இப்பெறுமதிக்க தகவல் மூலமானது வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இலங்கையில் காணாமல் போன ஆட்களுடைய குடும்பங்கள் உண்மை, நீதி, நல்லிணக்கம் ஆகியவற்றை மேலும் வினைத்திறனான முறையிலும் விளைதிறனான முறையிலும் பெற்றுக்கொள்ள வசதியளிக்கின்ற வகையில் OMP மேற்கொள்கின்ற தரவுத்தளத்தை மையப்படுத்திய அணுகுமுறைக்கான அடித்தளத்தினைத் தரவு முகாமைப் பிரிவு மேற்கொள்கின்ற துல்லியமான நிருவாகவியல் பணிகள் ஏற்படுத்திக்கொடுக்கின்றன.

## 10. பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு

பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவானது தமது அன்புக்குரியவர்களுக்கான நீதியைத் தேடும் முறைப்பாட்டாளர்களுடன் முக்கிய தொடர்பை மேற்கொள்ளும் OMP இன் உள்ளக அங்கமாகும். ஐந்து பிராந்தியங்கள் மற்றும் அவ்வொவ்வொரு பிராந்தியத்தலும் பால்மை அடிப்படையிலான பிரிவுகளையும் கொண்ட, இப்பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவுப் பிரிவானது முறைப்பாட்டாளர்கள் வாக்குமூலம் வழங்குகையில் அவர்களது பாதுகாப்பையும் சௌகரியத்தையும் உறுதிப்படுத்துவதற்கான பல்வேறுபட்ட உளரீதியான , சமூக ரீதியான முறைகளைப் பின்பற்றுகின்றது.

பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு அலுவலர்கள் முறைப்பாட்டுச் செயன்முறையின் தொடக்க செயன்முறையை கையாள்கின்ற அதேவேளை OMP முறைப்பாடுகளை தீர்ப்பதற்கான மிகச்சிறந்த பொறிமுறைகளை வழங்குகிறது. பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவானது காணாமல் ஆக்கப்ட்ட சூழ்நிலை (COA) மற்றும் காணாமல் ஆக்கப்பட்டமைக்கான காரணம் (COD) என்பன தொடர்பான அவர்களின் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு முறைப்பாட்டாளர்களின் வழக்கெழு காரணி மற்றும் இழப்பீடுகளைத் திரட்டிப் பரிந்துரைசெய்கின்றது.

பணிநிலையில் கிட்டத்தட்ட 200 ஒப்பந்த பணியாளர்களுடன் நிரந்த ஊழியர்களுக்கான பற்றாக்குறையை கொண்டிருக்கின்றமை பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு எதிர்கொள்ளும் மிகமுக்கியமான சவால்களுள் ஒன்றாகும். இப்பணியாளர்களின் பற்றாக்குறையானது தரவுப்பதிவு மற்றும் அவர்களின் ஆதிக்க வரம்பினுள் பணியாற்றுவதற்கு சிரமங்களை ஏற்படுத்துவதுடன் முறைப்பாடுகளின் சுமுகமான செயற்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு (VFS) தரவுப் பணியாளர்களுடன் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும் பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு (VFS) முறைப்பாட்டாளர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்க

உறுதிபூண்டுள்ளது. முறைப்பாட்டை ஒப்புக்கொண்டதன் பின்னர், விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்ட தகவலை அடிப்படையாக கொண்ட கடப்பாட்டை ஆராய்வதற்குத் தேவையான ஆவணங்களை பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு (VFS) கோருகின்றது. முறைப்பாட்டிலக்கம் வழங்கல் மற்றும் முறைப்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான ஆவணப் பட்டியலை சரிசெய்தல் ஆகிய இரு இலக்குகளை ஒப்புக்கொள்ளல் செயற்படுத்துகின்றது.

எஞ்சியுள்ள 2021 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட முறைப்பாட்டு ஒப்புதல்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் கிடைத்த புதிய முறைப்பாடுகள் அனைத்தையும் பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவினால் (VFS) நிறைவேற்ற முடியுமாக இருந்தது. இம்முறைப்பாடுகள் செயற்படுத்தலின் இறுதிக் கட்டம் தரவு முகாமைப் பிரிவு மற்றும் சட்டப் பிரிவு என்பவற்றிடம் அவற்றின் விசாரணை செயன்முறைகளை விரைவாக முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் தொடக்கம் 2022 ஆம் ஆண்டு முறைப்பாட்டு இறுதிக் காலக்கெடு வரை காணாமல் போதல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முறைப்பாடுகளை தாக்கல் செய்த முறைப்பாளர்களுக்கு 14,988 ஒப்புதல் கடிதங்களை பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு (VFS) வழங்கியுள்ளது.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில், காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு நீதியை வழங்குவதற்கான OMP இன் இலக்கை அடைய பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு (VFS) மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றது. சகல முறைப்பாடுகளும் வினைத்திறனாகவும் நேர்மையாகவும் செயற்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் அவர்களது அர்ப்பணிப்பனிப்பு மற்றும் உறுதிப்பாடு என்பவற்றுடன், பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு (VFS) பஞ்சாங்க ஆண்டு முழுவதும் இலங்கை சமூகத்தினருக்கு பாரிய சேவைகளை தொடர்ச்சியாக வழங்கியுள்ளது.

பின்வரும் அட்டவணை வருடமொன்றில் அனுப்பப்பட்ட சகல ஒப்புதல் கடிதங்கள் தொடர்பான விபரங்களையும் உள்ளடக்கியுள்ளது.

| மாவட்டம் | **பெற்றுக்கொண்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | **ஒப்புக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | **ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை (தலைமை அலுவலகம்)** |
|---|---|---|---|
| அம்பாறை | 566 | 566 | 00 |
| அநுராதபுரம் | 273 | 273 | 00 |
| பதுளை | 06 | 06 | 00 |
| மட்டக்களப்பு | 4157 | 4157 | 00 |
| கொழும்பு | 130 | 130 | 00 |
| காலி | 297 | 297 | 00 |
| கம்பஹா | 261 | 261 | 00 |
| ஹம்பாந்தோட்டை | 393 | 393 | 00 |

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 2106 | 2106 | 00 |
| களுத்துறை | 190 | 190 | 00 |
| கண்டி | 582 | 582 | 00 |
| கேகாலை | 109 | 109 | 00 |
| கிளிநொச்சி | 1010 | 1010 | 00 |
| குருணாகல் | 387 | 387 | 00 |
| மன்னார் | 488 | 488 | 00 |
| மாத்தளை | 292 | 292 | 00 |
| மாத்தறை | 555 | 555 | 00 |
| மொனராகலை | 76 | 76 | 00 |
| முல்லைத்தீவு | 528 | 528 | 00 |
| நுவரெலியா | 16 | 16 | 00 |
| பொலந்நறுவை | 343 | 343 | 00 |
| புத்தளம் | 85 | 85 | 00 |
| இரத்தினபுரி | 221 | 221 | 00 |
| திருகோணமலை | 1349 | 1349 | 00 |
| வவுனியா | 568 | 568 | 00 |
| **மொத்தம்** | **14,988** | **14,988** | **00** |

OMP தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்த குடும்பங்களின் எண்ணிக்கை மூலம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு பின்வருமாறு,

| **மாதம்** | **தலைமைக் காரியாலத்திற்கு வருகைதந்த குடும்பங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| ஜனவரி | 04 |
| பெப்ரவரி | 02 |
| மார்ச் | 08 |
| ஏப்ரல் | 03 |
| ஜூன் | 01 |
| ஜூலை | 03 |
| ஆகஸ்ட் | 02 |
| செப்டம்பர் | - |
| ஒக்டோபர் | 04 |
| நவம்பர் | - |
| டிசம்பர் | 01 |
| **மொத்தம்** | 28 |

## 10.1 காணாமல் போன ஆட்கள் பற்றிய தரவுப் படிவம்

காணாமல் போதல் மற்றும் காணமல் ஆக்கப்பட்டமை தொடர்பான தகவல் சேகரிப்பதற்காக OMP இனால் பயன்படுத்தப்பட்ட காணாமல் ஆட்கள் பற்றிய தரவுப் படிவம் பல்வேறு கட்டங்களை அடைந்துள்ளது. 2018 ஆம் அண்டு ஆரம்பிக்கப்பட்டாலும், 2019ம் ஆண்டு கருத்துக்கணிப்பை அடிப்படையாக கொண்டு இற்றைப்படுத்தப்பட்ட காணாமல் போன ஆட்கள் பற்றிய தரவுப் படிவம் 2022ம் ஆண்டு இறுதிப்படுத்தப்பட்டு OMP யின் நிருவாகக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்றது. இப்படிவம் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் கிடைக்கின்றன. காணாமல் போன ஆட்களின் அறிக்கையைப் பதிவுசெய்வதற்குத் தேவைப்படும் அதி குறைந்த தகவல் மற்றும் இலங்கை நாட்டின் தனித்துவ சூழல் மற்றும் தேவைகள் பற்றி சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை அடிப்படையாக கொண்டு இப்படிவம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் பெறுபேறாக, காணாமல் போன ஆட்கள் பற்றிய இலகுபடுத்தப்பட்ட தரவுப் படிவம் OMP நிருவாகக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பெற்றுக்கொள்ள முடிந்தது.

## 10.2 பாதிக்கப்பட்டோர் குடும்பத்தினருக்கான ஆதரவு மற்றும் வெளி ஒத்துழைப்புக்கள்

பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்ப ஆதரவு வழங்கும் பிரிவு அதன் வகிபாகத்திற்கு மேலதிகமாக, காணாமல் போன ஆட்கள் பற்றிய சம்பவங்களுடன் தொடர்புடைய மேலதிக தகவல்களைத் திரட்டப் பல்வேறுபட்ட நிறுவனங்களுடன் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) ஒத்துழைப்புடன் செயற்படுகிறது. ஒவ்வொரு சம்பவத்தைப் பற்றிய விளக்கமான புரிதலிற்கு பங்களிப்புச் செய்யக் கூடிய பெறுமதியான அக நோக்குகள் மற்றும் தரவு என்பவற்றைப் பெற்றுக்கொள்ள பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் உள்நாட்டு காவல்துறை போன்றோருடன் செயற்பாட்டு ரீதியாக OMP ஈடுபாடு கொண்டுள்ளது.

தொடர்புபட்டுள்ள காணாமல் போன ஆட்களின் குடும்பங்களின் முக்கியத்துவத்தை இணங்கண்டு அவர்களுடன் நெருக்கமான தொடர்பாடலை OMP பேணி வருகிறது. ஆதரவானதும் அகவுணர்வுகளை அறியக்கூடிய சூழல் ஒன்றை நிறுவி, குடும்பத்தினரது குரல்களுக்குச் செவி சாய்த்து அவர்களது தேவைகளைப் புரிந்து கொண்டுள்ளோம் என்பதை OMP உறுதிப்படுத்துகிறது.

இவ் ஒத்துழைப்பு அணுகுமுறையானது விசாரணைச் செயன்முறையை மேலும் வலுப்படுத்தி தரவுகளின் அனைத்து மட்டங்களிலான தரத்தையும் மேம்படுத்தி குடும்பத்தினரிடம் இருந்து முக்கியமான தகவல்களை பெறவும் OMP இனை ஏதுவாக்குகின்றது. வினைத்திறனான தரவு முகாமைத்துவத்தை இலகுபடுத்துவதற்கு OMP இன் பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்ப ஆதரவு வழங்கும் பிரிவானது சட்டப் பிரிவுடன் இணைந்து செயலாற்றுகிறது. இச் சட்டப் பிரிவானது விசாரணை செயன்முறையில் ஈடுபடும் குழும அங்கத்தவர்களுக்கான அத்தியாவசிய அம்சங்கள் மற்றும் வழிகாட்டல்களை மேம்படுத்துவதில் பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ளது. இவை விரிவான நடத்தைக் கோவை, செயற்படுத்தல் வழிகாட்டல்கள், சரிபார்ப்புப் பட்டியல்கள் மற்றும் நிகழ்வு முகாமைத்துவ நுட்பங்கள் போன்றவற்றின் உருவாக்கத்தை உள்ளடக்குகிறது. விசாரணை செயன்முறைகள் சட்ட மற்றும் நெறிமுறை நியமங்களைப் பின்பற்றி வெளிப்படையாகவும் ஒழுங்கு முறையாகவும் மற்றும் பொறுப்புக்கூறும் விதத்திலும் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை இவ்வளங்கள் உறுதிப்படுத்துகின்றன.

பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்ப ஆதரவு வழங்கும் பிரிவு, சட்டப் பிரிவு மற்றும் உரிய அதிகாரிகளுடனான ஒன்றிணைந்த பங்களிப்புகள் போன்ற இணைப்பு முயற்சிகள் ஊடாக பலமான மற்றும் நம்பகத்தன்மை மிக்க தரவு முகாமைத்துவ முறைமையைக் கட்டியெழுப்ப OMP முனைகின்றது.

இம் முறைமையானது பிரதானமாக இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட குடும்பத்தினருக்கான உண்மையைக் கண்டறிதல், நீதி மற்றும் நல்லிணக்கம் போன்ற OMP இன் இலக்கை முன்னேற்றுதல், துல்லியமான ஆவணமயமாக்கல், வினைத்திறன் மிக்க பகுப்பாய்வு மற்றும் தீர்மானம் எடுத்தலை அறிவுறுத்தல் என்பவற்றை அனுமதிக்கிறது.

## 11. நிதி மற்றும் பெறுகைப் பிரிவு

2022ம் ஆண்டிற்கான காணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கை இத்தால் இணைக்கப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, ஊழியர் ஆட்சேர்ப்பு மீதான பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் பெருந்தொற்றுடன் தொடர்பான வரையறைகள் காரணமாக, நிகழ்ச்சி மற்றும் நிர்வாக செயற்பாடுகள் இரண்டிலும் திட்டமிட்டபடி OMP இனால் தனது நிதி இலக்குகளை அடைய முடியவில்லை. அலுவலகத்தின் சுமுகமான செயற்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கில் வருட இறுதியை நோக்கி தவிசாளரினால் நிதி மற்றும் கொள்முதல் தொடர்பாக குறிப்பிடத்தக்க இலக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது.

## 12. மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவு

தலைமை அலுவலகத்தைக் கொழும்பிலும் கிளிநொச்சி, மன்னார், மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பிராந்திய அலுவலகங்களையும் முழுமையாக செயற்படுத்த OMP தனது குறிப்பிடத்தக்க ஆற்றல் மற்றும் வளங்களை ஈடுபடுத்தியுள்ளது. பிராந்திய அலுவலகங்களை நிறுவியமையானது பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள குடும்பங்களை இலகுவாகச் சென்றடைய OMP இனை ஏதுவாக்கியுள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எவ்வேளையிலும் உணர்திறன், கண்ணியம் மற்றும் கௌரவத்துடன் கவனிக்கப்படுகின்றார்கள் என்பதை உறுப்படுத்தி செயற்படுவதில் OMP உறுதி பூண்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகளை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான இயலுமையை வரையறுக்கும் பல்வேறுபட்ட விதிகள் மற்றும் விதிமுறைகள் காரணமாக முக்கியமான பதவிகளைத் தக்கவைத்தல் மற்றும் ஆட்சேர்ப்பு செய்தல் என்பவற்றில் OMP குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்கியுள்ளது. 2022 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நாட்டை வீழ்ச்சியடையச் செய்த பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக குறிப்பிடத்தக்களவான ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தவைக்கப்பட்டிருந்ததை OMP அவதானித்துள்ளது. அப்பகுதிகளில் தனிப்பட்ட நிபுணர்களை நியமிக்க முடியாமல் போனமை ஆண்டின் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு OMP இன் செயற்பாட்டை முடங்கச்செய்தது.

முதல் தவிசாளராகிய சாலிய பீரிஸ் (சனாதிபதி சட்டத்தரணி) மற்றும் OMP நிருவாகக் குழு அங்கத்தவர்கள் போன்றோர் அத்தியாவசிய பணிகளை நடைமுறைப்படுத்த பல்வேறு மட்டங்களில் செயற்பட்டு OMP இன் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டில் பிரதான பங்கு வகித்துள்ளனர். OMP இன் மூலோபாய நோக்குகளை ஆராய்வதற்காக நிருவாகக் குழுவானது முறையான சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளது. நாட்டின் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்டிக்கு மத்தியிலும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 21 கூட்டங்களை நடாத்தியுள்ளது. மூலோபாய வரைபடம், செயலணி மறுசீரமைப்பு, விசாரணைச் செயன்முறை மற்றும் திறன்

கட்டமைப்பு போன்ற விரிவான தலைப்புக்களில் OMP நிருவாகக் குழு அங்கத்தவர்கள் ஆராய்வதை OMP கூட்டங்கள் வெளிப்படுத்தின. OMP நிருவாகக் குழு அங்கத்தவர்கள் OMP இன் செயற்பாடுகள் மற்றும் துறைத்தலைவர்கள் நியமிக்கப்படாத அல்லது துறைகள் நிறுவப்படாத செயற்பாடுகளை ஊழியர்களுடன் நடைமுறைப்படுத்த தொடர்ச்சியாக மேற்பார்வைகளில் ஈடுபட்டுள்ளனர். மேலும், ஆணையாளர்கள் விசாரணைகளை நடாத்துதல் மற்றும் களப்பயணங்களில் பங்களிப்புச் செய்வதுடன் OMP இன் சேவைகள் முன்னேற்றத்தில் தொடர்புபட்ட குடும்பங்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் ஏனைய அரச அதிகாரிகளுடனும் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

12.1 **பணியாளர் ஆட்சேர்ப்பு**

OMP உருவாக்கப்பட்டது தொடக்கம் அதன் பதவிகளை நிறைவேற்றத் தேவைப்படும் அனுபவத்துடன் கூடிய தகைமை மிக்க ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்ய குறிப்பிடத்தக்க காலம், பலம் மற்றும் வளங்களைப் பயன்படுத்தி உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பணி நிலையில் 255 ஆட்களுக்கான பணியாட்டொகுதி காணப்படுகின்ற போதிலும் நிரந்தர பணி நிலையில் 24 அங்கத்தவர்களும் ஒப்பந்த அடிப்படையில் ஏனைய 3 அங்கத்தவர்களும் காணப்படுகின்றமை இவ்வருட காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட முக்கிய விடயம் ஆகும்.

2022 ஆம் ஆண்டு மிக முக்கியமான ஒப்பந்த அடிப்படை ஆட்சேர்ப்பாக நிறைவேற்றுப் பணிப்பாளராக திரு. ஜெகநாதன் தற்பரன் அவர்களது இணைப்பு அமைந்திருந்தது.

அதே போன்று, மேலதிக சாரதி ஒருவரையும் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரையும் ஒரு வருடகால ஒப்பந்த அடிப்படையில் OMP பணிக்கு அமர்த்தியது.

அறிக்கை தயாரிக்கும் காலப் பகுதியில், எவ்வித புதிய பதவிகளும் உருவாக்கப்படவில்லை என்பதுடன் OMP ஆனது தனது முறைமையில் புதிய சட்ட மற்றும் கொள்கை சீர்திருத்தங்களை அறிமுகம் செய்யவில்லை.

திரு. மகேஷ் கட்டுலந்த இவ்வருட காலப்பகுதியில் தலைமைத்துவத்தில் தொடர்ந்து இருப்பதுடன் குழு அங்கத்தவர்களில் திரு. சிராஸ் நூர்தீன் அவர்கள் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி பதவி விலகிக் கொண்டார். திரு. ஜே. விக்கிரமசிங்க அவர்களும் ஏனைய தொழில் வாய்ப்புகளை தொடர்வதற்கு குழுவில் இருந்து நீங்கிச் சென்றார். எனவே, 2022 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட புதிய குழு பின்வருமாறு.

| | முழுப்பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. மகேஷ் கட்டுலந்த, ஏ.ஏ.எல் | தவிசாளர் |
| 2 | திரு. விஜயகோன் பண்டார கநேகல | நிருவாகக் குழு அங்கத்தவர் |
| 3 | செல்வி. சித்தி தானி அர்ஃபா தாசிம் | நிருவாகக் குழு அங்கத்தவர் |
| 4 | திரு. தம்பையா யோகராஜா | நிருவாகக் குழு அங்கத்தவர் |
| 5 | திரு. பி.எம்.டபிள்யு. சம்பத் பெரேரா | நிருவாகக் குழு அங்கத்தவர் |

| | | |
|---|---|---|
| 6 | திரு. மாதவ ஜெயவர்தன | நிருவாகக் குழு அங்கத்தவர் |
| 7 | திரு. ஜயந்த விக்ரமசிங்க | நிருவாகக் குழு அங்கத்தவர் |

## 13. தொடர்பாடல் மற்றும் தொடர்புகொள்ளல் பிரிவு

காணாமல் போதல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் பின்னணியில் உள்ள காரணங்கள், அவர்களின் சம்பவம் மற்றும் தாக்கம் பற்றி பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரித்து அவர்களது குடும்பங்களுக்கு உதவுவதற்கு ஆதரவு அணிதிரட்டல் OMP இன் கடமைப்பாடாகும். 2018ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம், இலக்கு மற்றும் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கும்; சமூகம் மற்றும் அரசாங்கத்திற்கான தேவையை முன்னிலைப்படுத்தவும், காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கும், OMP பற்றிய கட்டுக்கதைகளை அகற்றவும் OMP ஆனது தொடர்பாடல் மற்றும் தொடர்புகொள்ளல் மூலோபாயத்தை மேம்படுத்தியுள்ளது. இதனை மேற்கொள்ளும் பொருட்டு, காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர், முக்கிய பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் OMP இன் செயற்பாடுகளை பௌதீக மற்றும் டிஜிட்டல் தளங்கள் ஊடாக அறிந்துகொள்வதனை உறுதிப்படுத்தியுள்ளது.

தொடர்பாடல் மற்றும் தொடர்புகொள்ளல் பிரிவு இதுவரை நிறுவப்பட்டிருக்காமையால் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுடன் இணைந்ததாக பொருத்தமான பிரிவுகள் ஊடாக சகல செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வைசெய்யப்பட்டன.

### 13.1 ஊடகங்களுடனான தொடர்பு

பாதிக்கப்பட்டோர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தின நினைவாக ஆகஸ்ட் 30 ஆம் திகதி ஊடக மாநாடொன்று நடாத்தப்பட்டது.

நாட்டின் சூழ்நிலை அதிகமான பொது நிகழ்வுகளை நடாத்துவதில் இருந்து OMP இனைக் கட்டுப்படுத்தியிருந்தது.

### 13.2 எண்ணிம நடைமுறை

எண்ணிம வலைத்தளங்கள் ஊடாக பொது மக்களின் பங்கேற்பை இயலச் செய்ய டுவிற்றர் மற்றும் முகநூல் போன்றவற்றில் OMP சமூக ஊடகக் கணக்குகளை முகாமை செய்தது. 2022 டிசம்பர் 31 வரை OMP ஆனது டுவிற்றரில் 2088 பின் தொடர்பவர்களையும் முகநூலில் 5000 பின் தொடர்பவர்களையும் கொண்டிருந்தது.

## 14. தகவலுக்கான உரிமை

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ், OMP ஆனது அதனால் மேற்கொள்ளப்படும் தகவலை அடைவதற்கு உறுதிப்படுத்தல் வேண்டும். 2022 ஆம் ஆண்டில் OMP ஆனது தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைகளை எவ்வாறு செயற்படுத்தியது என்பதை பின்வரும் அட்டவணை சாரம்சமளிக்கிறது.

| இல | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | 2022 ஆம் ஆண்டின் தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 08 |
| 2 | முழுமையாக வழங்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 06 |
| 3 | பகுதியளவு வழங்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 00 |
| 4 | சட்டத்தின் பிரிவு 05 இன் படி மறுக்கப்பட்ட அல்லது தடைப்படுத்தப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 02 |
| 5 | சட்டத்தின் பிரிவு 05 இல் உள்ளடக்கப்பட்ட காரணங்கள் இன்றி மறுக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை (எ.கா தகவல் கிடைக்கப் பெறாமை) | 00 |
| 6 | தகவல் கோரிக்கை ஒன்றுக்கு பதிலளிக்க எடுத்த சாதாரண காலம் (வேலை நாட்களின் எண்ணிக்கை) என்ன? | 14 நாட்கள் |
| 7 | கடிதம் ஊடாக கிடைக்கப்பெற்ற தகவல் கோரிக்கைகள் எத்தனை? | 08 |
| 8 | மின் அஞ்சல் ஊடாகக் கிடைக்கப்பெற்ற தகவல் கோரிக்கைகள் எத்தனை? | 00 |
| 9 | கடிதம் அல்லது மின் அஞ்சல் அல்லாத வேறு வழிகளில் கிடைக்கப்பெற்ற தகவல் கோரிக்கைகள் எத்தனை? | 00 |

## 15. 2022 ஆம் ஆண்டில் எதிர்கொண்ட சவால்கள்

2016 ஆம் ஆணடின் 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் பிரிவு 11 ஆனது நீக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க திருத்தச் சட்டம் கொண்டுவரபட்டதன் காரணமாக கொள்கைகள் சார்ந்த உள்ளகச் சவால்கள் எழுந்தன. இச்சீர்திருத்தத்திற்கு ஏற்ப ஏதேனும் நிறுவனத்துடன் அல்லது யாரேனும் ஆளுடன் OMP இன் கடப்பாட்டை அடைந்துகொள்ள அவசியப்படுகின்ற ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவது தொடர்பில் அதிலுள்ள வாசகமானது கவனம் செலுத்தியுள்ளபடியால் சுயாதீனமான ஒரு நிறுவனமாக சேவையாற்றுவதில் OMP சிக்கல்களை எதிர்கொள்கின்றது.

மேலும், மட்டுப்படுத்தப்பட்ட மனித வளங்களால் OMP கடுமையான சவால்களை எதிர்கொள்கிறது. OMP அங்கத்தவர்களின் பதவி விலகல் காரணமாக தொடர்ச்சியான தலைமைத்துவ மாற்றங்களினால் OMP பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட பணி நிலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் பிரதான சவாலாகக் காணப்பட்டது. இவ்வருடத்தின் கடந்த காலாண்டில் புதிய தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் OMP ஆனது நீதி அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுகள், அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்கள் போன்றோருடன் இச்சவாலை எதிர்கொள்வதற்கு ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது.

16. நன்றி நவிலல்

2022 ஆம் ஆண்டில் எமது இலக்குகளை அடைய தமது அதியுயர் ஒத்துழைப்புக்களை வழங்கிய எமது பங்காளர்கள் அனைவருக்கும் OMP தனது நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது. அரசாங்கம், அமைச்சர், பதிவாளர் நாயகத்தின் அலுவலகம், சட்டமா அதிபர் அலுவலகம், சகல மாவட்ட செயலார்கள் மற்றும் கிராம அலுவலர்கள் போன்றோரின் ஆதரவுக்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். UN, EU மற்றும் ICRC உள்ளிட்ட இராஜதந்திர சமுதாயம் மற்றும் அபிவிருத்தி பங்குதாரர்கள் OMP இன் செயற்பாடுகளுக்கு தமது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளனர். எமது அலுவலகமானது அவர்களின் ஆதரவை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறது. மேலும் குடும்ப சங்கங்கள் மற்றும் சமயத் தலைவர்கள் போன்றோர் 2022 ஆம் ஆண்டில் வழங்கிய ஒத்துழைப்புக்கு OMP நன்றி தெரிவிக்கின்றது. அவர்க்ளின் ஈடுபாடின்றி OMP இனால் இந்த இடத்தை அடைந்திருக்க முடியாது. ஊடகங்கள், ஊடகவியாளர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் வழங்கிய ஒத்துழைப்பு பாராட்டப்பட வேண்டியவையாகும் என்பதுடன் அவர்களுக்கும் OMP நன்றியை தெரிவிக்கின்றது. இறுதியாக, 2022 ஆம் ஆண்டை வெற்றிகள் நிறைந்த வருடமாக மாற்றி அமைக்க அயராத முயற்சிகளை மேற்கொண்ட நீதி அமைச்சின் ஊழியர்கள், OMP அணியினர், தொண்டர்கள் மற்றும் OMP குழு அங்கத்தவர்கள் அனைவருக்கும் OMP பாராட்டுக்களை தெரிவிக்கிறது.

## 17. கணக்காய்வு அறிக்கை

தவிசாளர்,

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 31.12.2022 ஆந் திகதியுடன் நிறைவுற்ற நிதிக் கூற்றுகள் தொடர்பிலும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பிலும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகம் வழங்கும் அறிக்கை.**

---

### 1. நிதிசார் கூற்றுகள்

#### 1.1. தகுதிபெறும் அபிப்பிராயம்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 31.12.2022 ஆந் திகதியுடன் நிறைவுற்ற ஆண்டுக்கான நிதிசார் கூற்றுகளின் கணக்காய்வு 31.12.2022 ஆந் திகதி வரையிலான வருமானம் மற்றும் செலவினங்களின் கூற்றினையும், ஒப்புரவு ரீதியான மாற்றங்கள் பற்றிய கூற்றினையும், காசுப் புழக்கம் பற்றிய கூற்றினையும் உள்ளடக்கி முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் விவரத் தொகுப்பினை உள்ளடக்கிய நிதிசார் கூற்றுகள் பற்றிய குறிப்புகளையும் கொண்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (1) உடன் சேர்த்து வாசிக்கக் கூடிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைவாக எனது வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கையில் காணப்படும் நான் கருத்திற்கொள்கின்ற எனது அவதானிப்புகளும் அபிப்பிராயங்களும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.2. எனது அபிப்பிராயத்தின் அடிப்படையில், இந்த அறிக்கையின் **தகுதிபெறும் அபிப்பிராயத்திற்கான அடிப்படைகள்** என்ற பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களின் செயல்வலு தவிர, நிறுவனத்தின் 31.12.2022 ஆந் திகதி வரையில் உள்ள நிதிசார் நிலைமை பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை நிதிக் கூற்றுகள் வழங்குகின்றன. அத்துடன் நிறுவனத்தின் நிதிசார் செயற்பாடுகளும் காசுப் புழக்கங்களும் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவே நிறைவுற்றுள்ளது.

### 1.2.1. தகுதிபெறும் அபிப்பிராயத்திற்கான அடிப்படைகள்

(i) பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமம் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படல் அவசியமாக இருக்கின்ற போதிலும் அலுவலகம் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களையே பின்பற்றியுள்ளது. எனவே அது நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ii) மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டுக்கான வாகனப் படிகளுக்கான கணக்கு ரூபா.2,383,333.00 ஆகக் காணப்படுகின்ற போதிலும் கணக்குகளில் ரூபா.2,433,633.00 தொகை காட்டப்பட்டுள்ளது. அந்த வகையில் வாகனப் படிகளுக்கான தொகை ரூபா.50,300 மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(iii) தவிசாளருக்கும் ஏனைய ஆணையாளர்களுக்கும் செலுத்த வேண்டிய 2021 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்துக்கான மாதாந்த படி ரூபா.169,840 மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டுக்கான செலவினக் கணக்குகளில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளது. அத்தொகையைக் கொண்டு மதிப்பீட்டு ஆண்டின் மாதாந்த படிகளின் செலவினங்கள் பற்றிய கணக்கு மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(iv) 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் சேர்க்கப்பட வேண்டிய 9 கூறுகளுக்குச் செலுத்தப்பட்ட தொகையான ரூபா.366,551.00 மதிப்பீட்டு ஆண்டின் செலவினக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக குறித்த தொகையைக் கொண்டு ஆண்டுக்கான மிகைக் கொடுப்பனவுகள் குறைவாகக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

(v) மதிப்பீட்டு ஆண்டிற்குட்பட்ட அலுவலகத்தின் பொருட்களின் தேய்மானத் தொகையாக ரூபா.477,600.00 உள்ளது. ஆனால் கணக்குகளில் அவை ரூபா.469,750.00 ஆகக் காட்டப்பட்டுள்ளன. அந்த வகையில் ஆண்டுக்கான தேய்மானப் பெறுமதியாக ரூபா. 7,850.00 குறை மதிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

(vi) அலுவலகத்தின் கணக்குப் புத்தகங்களில் வாகனங்களின் பெறுமதிகள் உள்ளடக்கப்படாதுள்ள போதிலும் மூன்று வாகனங்களுக்கான பழுதுபார்ப்புச் செலவாக அலுவலகத்தினால் ரூபா. 302,722.00 தொகை செலவு செய்யப்பட்டுள்ளது.

(vii) மதிப்பீட்டு ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட அட்டுறு செலவினப் பதிவாகிய ரூபா. 3,843,088.00 இற்கு அமைவாக, அட்டுறு செலவினமாகிய ரூபா. 67,183.00 தொகையானது ஆண்டிற்கு மேலும் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு சேர்க்கப்பட்ட பெறுமதித் தொகை பற்றிய ஏனைய குறிப்புகள் பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இவ்வாண்டின் அட்டுறு செலவினத் தொகை ரூபா. 3,446,513.00 தீர்ப்பனவு செய்யப்பட்டு ஆண்டு இறுதியில் ரூபா. 463,758.00 தொகை அட்டுறு செலவினமாகக் காட்டப்பட்டுள்ள போதிலும், மதிப்பீட்டு ஆண்டிற்குட்பட்ட தற்போதைய பொறுப்புகள் என்ற விடயத்தின் கீழ் கணக்குகளில் அத்தொகையைக்

காட்டுவதற்குப் பதிலாக தேறிய சொத்துகள் என்ற பகுதியில் அத்தொகையானது உள்ளடக்கப்பட்டுள்ளது.

(viii) ரூபா. 663,015 தொகையினை மதிப்பீட்டு ஆண்டில் மீட்டுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அது 31.12.2021 வரையில் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திடமிருந்து மீள்செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அது தேறிய சொத்துகளிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டு கழிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக, குறித்த தொகை மூலம் தேறிய சொத்துகள் குறைமதிப்பாகக் காட்டப்பட்டுள்ளன. மேலும், குறித்த தொகையைத் தள்ளுபடி செய்வதற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாகவே எனது கணக்காய்வை மேற்கொண்டுள்ளேன். அத்தகைய நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் எனது அறிக்கையின் நிதிசார் கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வு மேற்கொள்ளும் போது கணக்காய்வாளர் கொண்டிருக்க வேண்டிய பொறுப்புகள் என்ற பகுதியில் மேலதிகமாக விவரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதிவாய்ந்த அபிப்பிராயத்தை மேற்கொள்வதற்கான அடிப்படையாக கணக்காய்வுக்காக நான் பெற்றுக்கொண்ட சான்றுகள் போதுமானவையாகவும் பொருத்தமானவையாகவும் உள்ளன என்றும் நம்புகின்றேன்.

## 1.3. நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பிறகு எனக்கு அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிதி நிலைமை பற்றிய அறிக்கைகள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் சேர்க்கப்படாமல், நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை 2020 இல் சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நிறுவனத்தின் ஏனைய தகவல்கள் என்றே கொள்ளப்படும். ஏனைய மற்ற தகவல்களுக்கு முகாமைத்துவமே பொறுப்பேற்க வேண்டும்.

நிதிக் கூற்றில் உள்ள எனது அபிப்பிராயத்தில் வெளிப்படுத்தப்படாதுள்ள ஏனைய தகவல்கள் தொடர்பில் எத்தகைய உறுதிப்பாட்டையும் அல்லது கருத்தையும் நான் தெரிவிக்கமாட்டேன்.

எனது கணக்காய்வில் உள்ள நிதிக் கூற்றுகள் மீதான எனது பொறுப்பு, மேலே குறிப்பிடப்பட்ட அடையாளம் காணப்பட்ட அல்லது வேறு வழியில் பெறப்பட்ட தகவல்களைப் பெற்று அவற்றை எனது அறிவிற்குட்பட்ட வகையில் படித்து, அது நிதிக் கூற்றுகளுடன் அளவுகோலாக சரி செய்யப்படவில்லையா என்பதைதைச் சரிபார்ப்பது அறிக்கையிடுவதாகும்.

நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கையைப் படிக்கின்ற போது, முனைப்பழியுள்ள பிழைகள் அதில் உள்ளதாக நான் முடிவுறுத்தினால் அத்தகைய விடயங்களைத் திருத்திக்கொள்வதற்காக கட்டுப்படுத்தும் திறத்தவர்களுடன் அவ்விடயங்களைக் கலந்துரையாடுதல் வேண்டும். திருத்தப்படாதுள்ள பிழைகள் மேலும் தென்படுமாயின் அவை என்னால் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இற்கு அமைவாக உள்ளடக்கப்படும்.

## 1.4. நிதிசார் கூற்றுகள் தொடர்பில் முகாமைத்துவமும் நிர்வாகப் பொறுப்பாளிகளும் கொண்டுள்ள பொறுப்புகள்

இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையாகவும் நியாயமான முறையிலும் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. மோசடியான முறையிலோ அல்லது பிழையான வகையிலோ ஆவணங்களின் மூலம் பிழையாக அறிக்கையிடப்படாத வகையிலான நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு வசதியாக அத்தகைய உள்ளக கட்டுப்பாடானது முகாமைத்துவம் நிர்ணயிக்கின்றவாறு அமைவது அவசியமானதாகும்.

நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைக்கவோ அல்லது செயல்பாடுகளை நிறுத்தவோ விரும்பாத வரையில், அல்லது நிலவும் பிரச்சினையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துதல் மற்றும் கணக்கியலில் நிலவும் பிரச்சினைகளின் அடிப்படையைப் பயன்படுத்துதல் போன்றவற்றின் திறனை மதிப்பிடுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஆட்களே நிறுவனத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாளர்களாவர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் உப பிரிவு 16 (1) இன்படி, நிறுவனம் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சரியான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும், இது நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலமுறை நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்க உதவுகிறது.

## 1.5. கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக் கூற்றுகள் மோசடியான முறையில் அல்லது பிழையான முறையில் ஆவணங்கள் மூலம் பிழையாக அறிக்கையிடப்படாது உள்ளனவா என்பது குறித்த நியாயமான

உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வெளியிடுவதுமே எனது குறிக்கோள் ஆகும். நியாயமான உறுதிப்பாடு என்பது உச்சபட்ச உறுதிப்பாடாகும். ஆயினும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வு ஆவண ரீதியில் பிழையாக அறிக்கையிடப்பட்டுள்ளமையினை, அவ்வாறு தென்படுமிடத்து, எப்போதும் அவற்றைக் கண்டறியும் என்பதற்கான உத்தரவாதம் கிடையாது. பிழையான அறிக்கையிடல் என்பது மோசடியின் மூலமாகவோ அல்லது பிழை மூலமாகவோ மாத்திரம் ஏற்படுகின்றது. இந்த நிதிக் கூற்றுகளின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்கின்ற பயனர்னகளது பொருளாதாரத்தில் தனிப்பட்ட வகையிலோ அல்லது கூட்டாகவோ செல்வாக்குச் செலுத்துவதற்கு நியாயமான வாய்ப்பு உள்ளதாகக் எதிர்பார்க்கப்படுகின்ற பட்சத்தில் அவ்விடயங்கள் பிழையான அறிக்கையிடல்களாகக் கொள்ளப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவான கணக்காய்வு ஒன்றின் ஓர் அங்கமாக, கணக்காய்வு முழுவதும் தொழில்முறைசார் நீதியைப் பிரயோகித்து தொழில்முறைசார் ஐயத்தையும் பேணுகின்றேன். மேலும்

- மோசடி அல்லது பிழை காரணமாக, நிதிக் கூற்றுகள் தவறான முறையில் ஆவண ரீதியாக அறிக்கையிடப்படும் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிடுகிறேன், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயற்படுத்துகிறேன், மேலும் எனது அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுகிறேன். மோசடி என்பது சதிமோசம், போலி ஆவணப்படுத்தல், வேண்டுமென்ற புறக்கணிப்பு, தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவற்றுடன் தொடர்புபடும் என்பதால், மோசடியின் விளைவாக ஏற்படும் தவறான அறிக்கையைக் கண்டறியாமல் இருப்பதால் நேரும் ஆபத்து பிழையின் விளைவாக ஏற்படும் ஆபத்தை விட உயர்ந்த ஆபத்தாகும்.
- கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சூழ்நிலைகளுக்குப் பொருத்தமானவையாக அமைகின்ற கணக்காய்வு தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய புரிதலை நான் பெற்றுள்ளேன், ஆனால் நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் செயற்றிறன் குறித்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.
- நான் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் சரியான தன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகள் போன்றவற்றை மதிப்பீடு செய்கிறேன்.

- கணக்கியல் மற்றும் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில், முகாமைத்துவத்தின் சரியான பயன்பாட்டின் சரியான தன்மையை முடிவு செய்கிறேன், நிறுவனத்தில் நிலவும் பிரச்சினை ஒன்று தொடர்கின்ற வகையில் நிறுவனத்தின் செயற்றிறனில் குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளவாறு நிறுவனத்தின் நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான ஆவணங்களில் நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பதையும் முடிவு செய்கின்றேன். ஒரு நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் முடிவு செய்தால், நிதிக் கூற்றுகளில் உள்ள சம்பந்தப்பட்ட வெளிப்பாடுகள் அல்லது அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், எனது அபிப்பிராயத்தை மாற்றுவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையில் அவ்விடயம் குறித்த கவனத்தை ஈர்ப்பது எனக்கு அவசியமாகின்றது. எனது கணக்காய்வாளர் அறிக்கையின் திகதி வரையில் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலேயே எனது முடிவுகள் உள்ளன. எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் ஆகியன நிறுவனத்தை ஒரு பிரச்சினையாகக் காட்டுவதை நிறுத்தக்கூடும்.
- நிதிக் கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம், வெளிப்படுத்தல்கள் உட்பட, நிதிக் கூற்றுகள் நியாயமான சமர்ப்பிப்பை அடையும் விதத்தில் அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதையும் மதிப்பீடு செய்கிறேன்.

  எனது கணக்காய்வின் போது நான் கண்டறிந்த உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, குறிப்பிடத்தக்க கணக்காய்வுக் கண்டறிகைகள் தொடர்பாக, ஏனைய விடயங்களுடன் சேர்த்து ஆளுகைக்கு பொறுப்பானவர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

## 2. சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் குறித்த அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளுக்காக திட்டவட்டமான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2.1.1 பாதகமான அபிப்பிராயத்தை வழங்குவதற்கான காரணியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவைத் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுள்ளேன், மேலும் எனது மதிப்பாய்வில் அவதானிக்கப்பட்ட வரையில், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (அ) இன் தேவைப்பாடுகளக்கு அமைவாக அலுவலகத்தால் தேவைக்கேற்ப முறையான கணக்குப் பதிவுகள் பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக அலுவகத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த வருடத்திற்கு ஒப்பான நிலையில் உள்ளன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக கடந்த வருடத்தில் என்னால் முன்னெடுக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் போதுமான விடயங்களை வரையறுத்து கீழ் குறிப்பிட்ட வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள எவ்விடயமும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாட்டிற்கு அமைவாக அலுவலகத்தின் நிர்வாக சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு அலுவலகத்துடன் தொடர்புடைய ஏதேனும் உடன்படிக்கை பற்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வியாபாரத்திற்கு அப்பாற்பட்ட தொடர்பு உள்ளதெனவும்

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாட்டிற்கு அமைவாக கீழ் குறித்த அவதானிப்பு தவிர்ந்து ஏதேனும் உரிய எழுத்து மூலமான சட்டம் அல்லது அலுவலகத்தின் நிர்வாக சபையினரால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளனர் எனவும்.

| சட்டதிட்டங்கள்/ விதிமுறைகள் பற்றிய குறிப்பு | | அவதானம் |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றுநிருப இல 01/2020 | | |
| (i) | 9.1 (ஆ) அத்தியாயம் | அலுவலகத்தினால் பதவி நிலை அல்லாத அலுவலர்களுக்கு 8 தடவைகளில் மொத்தமாக ரூபா. 571,730 தற்காலிக இடைக்கால முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | 9.1 (ஆ) மற்றும் நிதிப்பிரமாணம் 371 (5) | கட்டுநிதி வழங்கப்பட்ட பின்னர் உரிய செயற்பாடு நிறைவடைந்து 10 நாட்களினுள் அப்பணம் மீள வழங்கவேண்டி இருந்தாலும், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் அலுவலர்கள் 14 தடவைகளில் பெற்றுக்கொண்ட இ கட்டுநிதியைச் செலுத்த 21 தொடக்கம் 245 நாட்கள் வரையான காலப்பகுதி தாமதப்படுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | 9.1 (ஆ) மற்றும் நிதிப்பிரமாணம் 371 (2) | நிதிப்பிரமாணத்தை மீறி 22 தடவைகளில் 11 அலுவலர்களுக்கு மொத்தமாக ரூபா. 11,892,081 கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| (iv) | 9.1 (ஆ) அத்தியாயம் | ரூபா. 100,000 இற்கும் அதிமாக 22 தடவைகளில் ரூபா. 11,892,081 கட்டுநிதி வழங்கப்பட்டதுடன் அதற்கான அனுமதியை திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 9.1 (இ) மற்றும் நிதிப்பிரமாணம் 371 (4) | குறிப்பிட்ட மற்றும் தேவையற்ற பணிகளுக்கு கட்டுநிதி எடுக்கக்கூடாது என்று கணக்கெடுப்பு அதிகாரி கூறியிருந்தாலும், 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் திகதி அலுவலர் ஒருவரால் பெறப்பட்ட ரூபா. 25,000/- தொகை செலவின்றி 2022ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் திகதி அன்று மீண்டும் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2016 டிசம்பர் மாதம் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றுநிருபத்தின் 3 ஆம் பந்தி | | அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தொடர்பாக, சுற்றுநிருபத்திற்கு அமைவான எரிபொருள் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2011 பெப்ரவரி மாதம் 09 ஆந் திகதிய 13/2008 (iv) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றுநிருபம் மற்றும் 2019 மே 31ஆந் திகதிய 13/2008 (v) ஆம் இலக்க திருத்தம்செய்யப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் | (i) | சுற்றுநிருபத்தின் நிபந்தனைகளை மீறி இரு அலுவலர்களுக்கு ரூபா. 47,995 இற்கு எரிபொருள் கொடுப்பனவு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) | பெற்றோல் ஒரு லீற்றரின் விலை ரூபா. 254 ஆக இருக்கையில் ரூபா. 338 என கணக்கிட்டமையின் காரணத்தினால் ஏப்ரல் மாதத்தில் அலுவலர் ஒருவருக்கு ரூபா. 12,180 கொடுப்பனவு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட PE/COP/POLI/CIRCULARS மற்றும் 2015 மே மாதம் 25 ஆந் திகதிய அரசாங்க முயற்சியாண்மை சுற்றுநிருபம் PED1/2015 இன் 3.5ம் பந்தி | (i) | அலுவலகத்தில் போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவைப் பெறும் நான்கு அலுவலகர்கள் கையிருப்பு வாகனங்களை பயன்படுத்தும் போது சுற்றுநிருப அறிவுறுத்தல்களை பின்பற்றவில்லை. |
| | (ii) | 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆந் திகதி |

| | | |
|---|---|---|
| | | தொடக்கம் பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி வரை வட மாகாணத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் பங்குபற்ற போக்குவரத்துக் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட இரு அலுவலர்கள் தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து இரு கார் வண்டிகளை வாடகைக்கு பெற்றுக்கொண்டதுடன் அதற்காக அலுவலகத்தினால் ரூபா. 141,860 தொகை செலவழிக்கப்பட்டது. |
| (உ) அரச நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) | நிதிப்பிரமாணம் 1646 | காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினரிடம் காணப்படும் மூன்று வாகனங்கள் தொடர்பான நாளாந்த வாகன ஓட்டற் படிவங்களும் மாதாந்த விவரத் தொகுப்புகளும் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 1645 (அ) | அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு, நிதிப்பிரமாணத்தின் படியான தினசரி குறிப்பு (லொக்) புத்தகங்களை இற்றைப்படுத்தி பேணுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 110 | நிதிப்பிரமாணத்தின் படி சேதங்கள் மற்றும் இழப்புகள் பற்றிய ஆவணம் இற்றைப்படுத்தி பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 315<br>நிதிப்பிரமாணம் 880<br>2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி | பிணை வைப்புச்செய்ய வேண்டிய அலுவலக உத்தியோகத்தர்கள் பிணைத் தொகையை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 395 (ஆ) | தயார் செய்யப்பட்ட வங்கி ஒப்பீடுகள் கணக்காய்வாளர் நாகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

(ஊ) நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01/2021ம் இலக்க மற்றும் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆந் திகதிய அரசாங்க முயற்சியாண்மைக்கான நிர்வாக கட்டுப்பாடு பற்றிய வழிகாட்டல்

| | | |
|---|---|---|
| (i) | அத்தியாயம் 04 | வழிகாட்டல்களின் படி கணக்காய்வு குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை |

| | | |
|---|---|---|
| (எ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் 16 (2) | சட்டத்திற்கமைய வருடாந்த நிதிக் கூற்றுகளுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |

2.2.3 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்ந்த அலுவலகத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு பொருந்தாத வகையில் செயற்பட்டுள்ளனர் எனவும்

| **அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள்** | **அவதானங்கள்** |
|---|---|

| | | |
|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (நிறுவுதல், நிர்வாகம் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் பிரிவு II இன் 10 (1) இல் காட்டப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற அலுவலகத்தின் பிரதான 3 பிரிவுகளான தேடுதல் மற்றும் விசாரணை, தொடர்பாடல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு, மற்றும் நிதி மற்றும் வழங்கல் பிரிவுகளில் நேரடியாக தொடர்புபடல் | 2022ம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்றவாறு, அப்பிரிவுகளால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனம் அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான வகையில் இம்மூன்று பிரிவுகளும் செயற்படாமையின் காரணமாக அலுவலகத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்ள முடியாமல் போனமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நிறுவுதற்குரிய சட்டத்தின் பிரதான பணிகளுள், காணாமல் போன ஆட்கள் தொடர்பான சம்பவங்கள் பற்றிய உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு உரிய அதிகாரிக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல் மற்றும் காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களின் உறவினர்களின் உரிமைகளைளையும் பிணைப்புக்களையும் பாதுகாத்தல் | 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையாக அலுவலகத்திற்கு மொத்தமாக 14,988 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதுடன் அன்றைய தினம் வரையில் 2,389 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய, கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளை ஒப்பிட்டுப்பார்க்கும் போது விசாரணைசெய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 15 சதவீதம் என்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. |

**2.2.4** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்ந்த அலுவலகத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதிமிக்கவையாகவும் உரிய காலப்பகுதியினுள் உரிய சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு கொள்முதல் செய்து பயன்படுத்தவில்லை எனவும்

(அ) 2022 ஆம் ஆண்டினுள் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா. 5,425,000 இற்குரிய 15 செயற்பாடுகளுள் எச்செயற்பாடும் மதிப்பீட்டு ஆண்டினுள் செயற்படுத்தப்படவில்லை.

(ஆ) செயற்பாட்டுத் திட்டமிடல் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்ந்துபார்க்கும் போது 5 பிரிவுகளுக்குரிய 21 செயற்பாடுகளுக்கு உரிய வகையில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதன் முன்னேற்றமும் நூற்றிற்கு 50 சதவீதத்திற்கும் குறைவான அளவில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

(இ) செயற்பாட்டுத் திட்டத்தில் பல்வேறு செயற்பாடுகளில் பௌதீக முன்னேற்றம் காணப்படினும், நிதிசார் முன்னேற்றம் குறிப்பிடப்படவில்லை.

(ஈ) 2022 ஆம் ஆண்டினுள் ரூபா. 9,000,000 செலவில் விசாரணைப் பிரிவின் ஒத்துழைப்புடன் விசாரணை நடாத்துவதற்கும் 9,000 கோப்புக்களை இற்றைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், அவ்வருடத்தின் இறுதியில் ரூபா. 20,580,368 செலவழித்து 2389 கோப்புக்கள் மாத்திரமே இற்றைப்படுத்தப்பட்டிருந்தன. அதன்படி மதிப்பிடப்பட்ட தொகையை விட நூற்றுக்கு 226 சதவீதத்தினால் தொகை அதிகரித்திருந்ததுடன் அதன்படி உரியவகையில் தொகை மதிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

(உ) அலுவலகத்தின் மானிட வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவினரால் அலவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை நடாத்துவதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு ரூபா. 148,638 தொகை செலுத்தப்பட்டிருந்தாலும் வருடத்தினுள் எப்பரீட்சையும் நடாத்தப்படவில்லை.

**2.3 வேறு விடயங்கள்**

பின்வரும் அவதானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மட்டக்களப்பு மற்றும் மாத்தறை அலுவலகங்களுக்காக முறையே ரூபா. 100,000 மற்றும் ரூபா. 150,000 மாதாந்த கூலி அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட

கட்டடங்களுக்கான குத்தகை ஒப்பந்தங்கள் முறையே 2022 ஆகஸ்ட் மாதம் 2022 ஜுன் மாதங்களில் முடிவடைந்தாலும், மீண்டும் அக்குத்தகை ஒப்பந்தங்களை புதுப்பிப்பதற்கோ வேறு கட்டடங்களுக்கு இடம்மாறிச் செல்வதற்கோ அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2022 ஆம் ஆண்டு ஏப்பிரல் 26 ஆந் திகதிய அரச செலவினங்களை கட்டுப்படுத்துவது தொடர்பான 03/2022 ஆம் இலக்க தேசிய வரவுசெலவு சுற்றுநிருபத்தின் பந்தி 2 இற்கமைய அரச செலவினங்களை மட்டுப்படுத்தல் அரச நிறுவனங்களினால் கடுமையாக பின்பற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதனை மீறிய செலவுகளுடன் ஐந்து பிராந்திய அலுவலகங்களுக்காக மதிப்பீட்டு வருடத்தில் அலுவலகத்தினால் ரூபா. 20,629,346 செலவிடப்பட்டதுடன், அவ்வருடத்தினுள் இப்பிராந்திய அலுவலகங்களுக்காக 274 முறைப்பாடுகள் மாத்திரம் பதிவுசெய்தல் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடத்தில் 7 மொழிபெயர்ப்பாளர்கள் இருப்பினும், ஒருவரையேனும் ஆட்சேர்ப்புசெய்யாமையின் காரணமாக 2022ம் ஆண்டில் வெளியில் இருந்து தெரிவுசெய்த 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு ரூபா. 3,082,880 தொகைப் பணம் மொழிபெயர்ப்புக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2022 ஆம் ஆண்டினுள் கட்டட வாடகையாக அலுவலகத்தினால் ரூபா. 22,377,622 வெளித்தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருப்பதுடன், இதற்கு மேலதிகமாக இக்கட்டடத்திற்காக ஒரு வருடத்தினுள் துப்புரவு செய்தல் சேவைக் கட்டணங்கள், பாதுகாப்பு சேவைகள், தூய்மைப்படுத்தல் செயற்பாடுகள், தண்ணீர் மற்றும் மின்சாரத்திற்கென ரூபா. 4,620,934 செலுத்தப்பட்டுள்ளன. இச்செலவுகள் 15 அலுவலர்கள் போன்ற சிறு எண்ணிக்கையினருக்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகளாக கண்டறியப்பட்டுள்ளன.

(உ) அலுவலக ஆரம்பத்தில் 255 அலுவலர்களுடனான ஊழியர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், தற்போது இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் 31 அலுவலர்களுடன் குறைவான எண்ணிக்கையினரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றமையால் உரிய வசதிகளை ஏற்படுத்துகையில் இவ்விடயம் பற்றி கவனத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்